

எடப்பாடியார் சாதனைகளில் சிகரம்...!



தமிழர்களின் திறமையும் பெருமையும்!



ஆடி மாதத்தின் தமிழர் மரபு

Kazhagamurasu (Tamil Monthly Magazine) - August-2020

# கழகமுரசு

ஆசிரியர்: 'சொல்லின் செல்வர்' ஆவடிக்குமார்

தமிழிலக்கியத் திங்கள் இதழ்

ஆகஸ்ட் - 2020
விலை ரூ.5



# கழக முரசு




## வெளியீட்டு விழா

அனைத்திந்திய தமிழ்ச்சங்கத் தலைவர் மற்றும் அம்மா தமிழ்ப்பீடம் நிறுவனர் "சொல்லின் செல்வர்" ஆவடிக்குமார் அவர்களை ஆசிரியராகக் கொண்ட, "கழக முரசு" தமிழ் இலக்கியத் திங்களிதழ் வெளியீட்டு விழா சென்னையில் காணொளி மூலம் நடைபெற்றது.

அனைத்திந்திய தமிழ்ச்சங்கத் தலைவர் "சொல்லின் செல்வர்" ஆவடிக்குமார் தலைமையில் நடைபெற்ற விழாவில்

"கழக முரசு" தமிழ் இலக்கியத் திங்கள் இதழின் முதல் பிரதியை, தமிழ்நாடு தொல்லியல், தமிழர் பண்பாடு, தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் மாஃப. க. பாண்டியராஜன் முதல் அச்சுப் பிரதியை பெற்றுக் கொண்டு "கழக முரசு" மின் இதழை இணையத்தில் தொடங்கிவைத்து சிறப்புரையாற்றினார்.

தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் மற்றும் உலகத் தமிழா ராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் கோ விசயராகவன், திருநின்றவூர் ஜெயா கல்வி குழுமங்களின் தலைவர் பேராசிரியர் முனைவர் கனகராஜ், பேராசிரியர் டேவிட்ராஜன், ஆர்.சி.தீனதயாளன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.



# KAZHAGAMURASU

(Tamil - Monthly)

R.N.I.,Regd.No. TNTAM\2003\11289



**Editor:**
**AVADIKUMAR.**
No.71, Nineth Street, Kamaraj Nagar,
Avadi, Chennai -600071.
e-mail: kazhagamurasueditor@gmail.com
**Call: 99411 74777, WhatsApp: 99412 74777**



**Editorial Board Members:**

Professor, **Dr. V. SRILATHA,** M.A..M.Phil.,PhD.,
e-mail: srilathavenugopal@gmail.com

Professor, **Dr. C. MUTHUMALAI,** M.A.,M.Phil.,PhD.,
e-mail: cmuthumalai23@gmail.com

Professor, **Dr.S. MALLIGA.,** M.A.,M.Phil.,Ph.D.,
e-mail: mallikasubramanian1212@gmail.com

Professor, **Dr.A. VIJAYARANI** M.A.,M.Phil.,Ph.D.,
e-mail: vijayaranigvss@gmail.com

Professor, **Dr.M. GOVINTHARAJALU** M.A.,M.Phil.,Ph.D.,
e-mail: govindarajulum76@gmail.com

Kavimamani **"Citruli" R. RAM GANESH**
M.A.,M.Ed.,M.Phil., S. M. E.
e-mail: rganash.phd@gmail.com

"Kavimamani" **Nellai G. SOMASUNDARI**
M.Sc.,B.Ed.,M.A.,M.Phil., S. M. E.
e-mail: gsomas30@gmail.com

Professor, **Dr. B.VAIDURIAMMAL**
M.A.(T), M.A.(Soc), M.Phil.,Ph.D.,, Dip in Telugu
e-mail: bvaiduma@gmail.com

Professor, **Dr. TAMIZHARASI KOTHAIMARBAN,**
M.A.,M.Phil.,Ph.D.,
e-mail: tamizhkothai@redeftamil.com

Professor, **Dr. M. SELVI,** M.A.,M.Phil., Ph.D.,
e-mail: selvichellappa1975@gmail.com

Professor, **Dr.V. SARALA ARUMUGAM,**
M.A.,M.Phil., Ph.D.,
e-mail: vsaralao@gmail.com

Professor, **Dr. N. DHANALAKSHMI,**
` M.A.,M.Phil., Ph.D.,
e-mail: dhanasathiya2729@gmail.com

Professor, **Dr. S.G. ESTHER ARUL MARY,**
M.A.,M.Ed.,M.Phil., Ph.D.,
e-mail: sgesther03@yahoo.com

**Manager:**
Advocate **A. K. NIRAIMATHI,** M.A.,B.L.,
e-mail: nirainila03@gmail.com

**Designer:**
**V. IYAMPERUMAL,**
e-mail: yesviperumal@gmail.com



**Publisher:**
**AVADIKUMAR. M**

**Place of publication:**
No.71, Ninth Street, Kamaraj Nagar,
Avadi, Chennai - 600071.
Thiruvallur District, Tamil Nadu.
e-mail: kazhagamurasu@gmail.com
Kazhakamurasu@gma il.com

**Website:**
https://www.kazhagamurasu.in



# கழக முரசு

ஆசிரியர்: 'சொல்லின் செல்வர்' **ஆவடிக்குமார்**

முழக்கம் –2 ஆகஸ்ட் – 2020


# ஆய்வுக்களம்....

**கா**லத்தின் குரலாக பிறப்பெடுத்த ,"கழக முரசு" தமிழிலக்கியத் திங்களிதழின் முதல் பிரதியை தமிழ் வளர்ச்சி, தமிழர் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் மாஃப. க. பாண்டியராஜன் அவர்களிடம் வழங்கி பெருமிதம் கொண்டோம்.

தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் க. பாண்டியராஜன் அவர்கள் அச்சு இதழைப் பெற்றுக்கொண்டும், "கழக முரசு" மின்னிதழை இணையத்தில் தொடங்கி வைத்தும் ஆற்றிய வாழ்த்துரையில், உலகத் தமிழ் மக்களின் இணைப்புப் பாலமாக "கழக முரசு" விளங்கிடும் வகையில், தேவையான அனைத்து உதவிகளையும், தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித்துறை செய்து தரும் என்ற உத்தரவாதத்தை வழங்கியது "கழக முரசு" தன் இலக்கு நோக்கிய தடத்தில், மிகச்சரியாக அடித்தளம் அமைத்துள்ளது என்பதை உணர்த்தும்.

குறை கூற முடியாத இலக்கியத் தரத்தையும், நிறைவான ஆய்வுத் தகுதியும் கொண்ட இதழாக "கழக முரசு" கிடைத்திருப்பதாக, படித்துணர்ந்த அனைவரும் பாராட்டி மகிழ்ந்தது, நம்முடைய பொறுப்பை கூடுதலாகி இருக்கிறது.

நாம் கடந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு நொடியும், ஆய்வு செய்ய தேவையான ஆவணங்களை அள்ளித்தந்து விட்டு காலம் சென்று கொண்டிருப்பதால், அதே வேகத்தில் கடந்தகால வாழ்க்கையைத் தெளிந்து, எதிர்கால வாழ்வியலை வடிவமைக்கும் முயற்சிகளின் பயிற்சிக்கான ஆய்வுக்களமாக "கழக முரசு" இயங்க வேண்டும் என்பதே நமது இலக்காகும்.

உலகத்தரம் என்று உணர வைக்கப்பட்டுள்ள எந்தக் கோட்பாடுகளின் வரையறைகளுக்குள்ளும் நாம் நம்மை அடக்கிக் கொள்ள முனையப் போவதில்லை. ஏனென்றால், உலகில் உருவான முதல் மொழியாம் தமிழ் மொழி, தமிழ்க்குடிகளின் வாழ்வியல் உணர்ச்சிகளின் வெளிப்பாடு, வளமார்ந்த வாழ்க்கையின் பண்பாடு, நெறி சார்ந்த நாகரிகத்தின் நிலைப்பாடு என்கின்ற உண்மையை உணர்த்துவதே "கழக முரசு" கைக்கொண்ட கடப்பாடு.

உலகத்திற்கு மொழி, பண்பாடு, நாகரிகம் தந்த தமிழ்க்குடிகளின் வாழ்வியல் மரபுவழி மட்டுமே நம் இயக்கமாக இருக்கும். அந்த வகையில் தமிழ் குடிகளின் நெறி சார்ந்த வாழ்வியல் தடத்தில், பாமரர்கள் படிக்கக்கூடிய ஆய்வு நோக்கில் "கழக முரசு" தமிழ் இலக்கியத் திங்களிதழ் களம் காண்கிறது.

இலக்கை அடைய, தொடர்ந்து இதழ்தோறும் இணைந்திருப்போம் வாரீர்... !

நல்லார்க்கினிய,

(ஆவடிக்குமார்)



> மகளின் செயல் கண்டு பரவச நிலையில் செல்லம்மா திகைப்பின் உச்சத்தில் குழந்தையை வாரி அணைத்துக் கொண்டாள்...

2

# இவள் ஒரு திருமதி

(ஒரு நிஜத்தின் நிழல்)

"சொல்லின் செல்வர்" ஆவடிக்குமார்



**வா**சலில் குழந்தை இளமதி வந்துக் கொண்டிருந் தாள்...! என்னடா பழக்கம்... எனக்குத் தெரியாமல் எப்படி போன... எங்க போயிட்டு வர... என்று கேள்விக் கணைகளால் மகளைத் துளைத்தெடுக்க நினைத்த செல்லம்மாவுக்கு நொடி யில் வாய் வரவில்லை...

தாங்கள் வசிக்கும் அடுக்கு மாடிக் குடியிருப்பில் கீழே இறங்கிப்போய் நுழைவுப்பகுதியில் வளர்க்கப் பட்டுவரும் செடிகளில் இருந்து ஒரு செம்பருத்தி பூவை வாயிற்காவலன் அனுமதி பெற்று பறித்து வந்தவள்... ஹாப்பி பர்த் டே அம்மா என்று தன் மழலை மொழியில் பேசி செம்பருத்திப்பூவை நீட்டினாள்.

மகளின் செயல் கண்டு தன்னை மறந்த பரவச நிலையில் செல்லம்மா திகைப்பின் உச்சத்தில் குழந்தையை வாரி அணைத்துக் கொண்டாள்... இதை சரியாக கையாண்ட குழந்தை... "என்னடா செல்லம்... என்னை தேடனியா... சாரி மா...!" என்று கொஞ்சிக் கொண்டே தன் பிஞ்சு உதடுகளை செல்லம்மாவின் கன்னத்தில் வைத்து முத்தக்குளியல் நடத்தியது.

தன்னை மகிழ்ச்சிப் பல்லக்கில் வைத்து பரவசப்படுத்திய குழந்தை இளமதியை உச்சி முகர்ந்த செல்லம்மா தானும்

குழந்தையானாள்... கண்ணே...! ராஜாத்தி... செல்லம்...! என் தெய்வமே...! எனக்காக செருப்பு கூட போடாம வெளியில போய் பூ பறிச்சி வந்தியா...! என் தங்கம் என்று ஆனந்தத்தில் குழந்தையை இறுகத் தழுவிக் கொண்டவள்... தன் மகளின் பிஞ்சுக் கால்களில் முத்தமிட்ட போது அவளை மீறிய மகிழ்ச்சி கண்ணீர்த் திவலைகளாக வெளிப்பட்டு குழந்தை மீது பட்டுத் தெறித்தன.

தனக்கு வாழ்க்கை தெரிந்த காலத்தில் இருந்து அன்புக்கும், அரவணைப்புக்கும் காத் திருந்து... காத்திருந்து நெஞ்சம் உறைந்து போ யிருந்த செல்லம்மாவுக்கு, குழந்தை இளமதியின் கபடமில்லாப் பாசம் வாழ்க்கையில் இதுவரை இல்லாத ஈர்ப்பை ஏற்படுத்தியது. ஈன்ற பொழுதினும் பெரிதுவந்தாள்.

தன் அனுபவத்தில் அன்பும், பாசமும் நாம் பெறுவதல்ல... நாம் மற்றவர்களுக்குத் தருவது என்று என்னியிருந்தவள்... பிஞ்சுக் குழந்தையின் வெள்ளை அன்பு தந்த போதையில் தடுமாறி தன்னை மறந்தாள்...!

தனது தாயிடம் தான் பெற முடியாத அன்பு... தன் கணவனிடம் கிடைக்காத பாசம்... தான் பெற்ற மகளிடமிருந்து வந்ததில் எல்லை யில்லா மகிழ்ச்சியில் இளமதியை தூக்கி பிடித்து முகத்துக்கு நேராக வைத்து சிரிப்பதும்... முத்தமிடுவதும்... அணைப்பதுமாக ஆனந்த நிலையில், இரண்டு இதயங்கள் அன்பை பரி மாறிக் கொள்ளும் போது காலம், நேரம், சூழல் எல்லாம் மறந்து போவது இயல்பு தானே....

படுக்கை அறையிலிருந்து வந்த ஜெயன் குரல் செல்லம்மாவை இயல்பு நிலைக்கு கொண்டு வந்தது.... இளமதி காபி கொண்டு வரச்சொல்லு... நா ரெடியாகனும்...

கடமை கண் விழித்ததால் வேறு வழியுன்றி குழந்தையை இறக்கி விட்டு உச்சியில் முத்தம் கொடுத்து அப்பா எழுந்திட்டார்... நீயும் குளிச்சு ரெடியாயிரு ... லேட்டாச்சுனா அப்பா உன்னை அடிப்பார். சீக்கிரம் வாம்மா... என்று சொல்லி கணவருக்கு காபி கொடுக்க போனாள்.

அடுத்த பத்து நிமிடங்களில் மூவருமே புறப்படத் தயாராகிவிட்டனர். பள்ளி செல்லும் குழந்தைக்கு மட்டுமல்லாமல் வீட்டில் இருக்கும் கணவருக்கும் மதிய உணவு எடுத்து வைத்து விட்டு, தனக்கானதை டிபன் பாக்சில் அடைத்துக் கொண்டு அவசர அவசரமாக கிளம்பினாள்.

என்ன செய்வது காலமும், கடிகாரமும் அவளை விட வேகமாக ஓடிவிட்டிருந்தது...! இனி நடந்து போய் பஸ் பிடித்து கிண்டி அழைத்துக் போய் அங்கிருந்து ரயில் அல்லது சேர் ஆட்டோ பிடித்து பள்ளிக்குப் போய் சேர முடியாது. மிகவும் கட்டுப்பாடு கொண்ட பிரபலமான தனியார் பள்ளி, திடீரென்று விடுமுறையும் எடுக்க விட மாட்டார்கள்.

குழந்தை இளமதியைப் பள்ளிக்கு அழைத்துப் போக ஜெயன் ரெடியாகிவிட்டார். அவர் இளமதியைப் பள்ளியில் விட்டு விட்டு வீட்டுக்கு வந்து சும்மா தானே இருக்கப் போகிறார். அவர் நினைத்தால் டூவீலரில் என்னைப் பள்ளிக்குக் கொண்டு போய் விட்டு விட்டு வரலாம். அவரிடம் கேட்டாலும் செய்யமாட்டார் நடக்காததைக் கேட்டு எதற்கு மனதில் வலியேற்றிக் கொள்ள வேண்டும் என்ற அவளது தன்மானம் தடை போட்டது.

சரி வேறுவழியில்லை... உடனடியாக செல் போன் எடுத்து கால் டாக்ஸிக்கு அழைப்பு அனுப்பிவிட்டு தன் கைப்பையில் உணவுப் பெட்டியை திணித்துக் கொண்டு செல்லம்மா நிமிர்ந்தாள்.



இளமதியைப் பள்ளிக்கு கூட்டிப் போக தயாரான ஜெயன் செல்லம்மாவைப் பார்த்து, இன்று மாலை நான் வெளியே போக வேண்டும். நீ.. சீக்கிரம் வந்திடு....! ஸ்பெஷல் கிளாஸ், .. பஸ் கிடைக்க லேன்னு லேட்டா வராதே...! குழந்தை தனியா இருப்பாள்... என்று கட்டளை பிறப்பித்து விட்டு பதிலைக் கூட எதிர் பார்க்காமல் இளமதியை ஏற்றிக் கொண்டு டூவீலரில் பறந்தான்.

வீட்டைப் பூட்டிக் கொண்டு அவசர அவசரமாக கால் டாக்ஸியில் உட்கார்ந்து தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டு... டிரைவரிடம் அண்ணா லேட் ஆயிடுச்சி... கொஞ்சம் சீக்கிரமா போங்க.... பிளீஸ் என்றாள்.

அவளுக்குத் தெரியும், இந்த நெருக்கடியான சாலைகளில் காலை நேரத்தில் போக்குவரத்து சிக்கலில் சிக்காமல் எப்படி போக முடியும் என்பது... இருந்தாலும் சொல்லி வைத்தாள்.

கார் கண்ணாடியில் வெளியுலகத்தைப் பார்த்தாள்.. எத்தனை மனிதர்கள்... ஒவ்வொருவரும் ஒரு திசையில் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். எல்லோருக்கும் உறவு இருக்கிறது... கடமை இருக்கிறது.

நமக்கு மட்டும் கடமையிருக்கிறது... ஆனால் உறவு இருப்பதாக நினைத்துக் கொண்டு போக வேண்டியதுதான்... தன் நிலையைப் பகிர்ந்துக் கொள்வதற்கோ... தன்னை ஆற்றுப் படுத்துவதற்கோ ஒரு உறவு இல்லை என்ற ஏக்கம் ஏற்பட்டது... அதைத் தொடர்ந்து குழந்தை இளமதி செம்பருத்தி பூ கொடுத்த காட்சி வலி நிவாரணியாக வந்தது. இதுவரை நம்மீது அக்கறை உள்ள யாரும் இல்லை என்று இருந்தோமே இப்போது நம் மகள் இருக்கிறாள் நமக்கென்ன கவலை என்று ஆறுதல் அடைந்தாள்.

அடுத்த நொடி அவள் மனதில் மின்னல் போல் தன்னைத் தூக்கத்திலிருந்து எழுப்பிய செல்பேசி குரல் பளிச்சிட்டது. நம்மை வாழ்த்தியவரிடம் இப்படிக் கடுமையாக நடந்துக் கொண்டிருக்க கூடாது தான். கொஞ்சம் முகம் கொடுத்து பேசியிருந்தால் நான் வந்து பள்ளிக்குக் கூட்டிக் கொண்டு போகிறேன் என்பாரே... அவருக்கு எதற்கு தொல்லை தரணும் அதனால் தான் கடுமை காட்டினேன் என்று தன் செயலைத் தானே மெச்சிக்கொண்டாள். ஏன் நம் மீது இந்த மனிதர் இப்படி பைத்தியமாக இருக்கிறாரோ என்று ஆராய்ச்சியில் ஈடுபட மனம் முனைந்த போதும் பிடி கிடைக்கவில்லை. அதற்குள் பள்ளிக்கூடம் வந்துவிட்டது.

உரிய பணத்தைத் தந்துவிட்டு இறங்கி பள்ளி வளாகத்தில் நுழைந்தவுடன் பள்ளி விதிமுறைகள் படி செல்போனை அணைத்து வைக்க எடுத்தாள்... அதில் ஒரு குறுஞ்செய்தி அவளுக்காகக் காத்திருந்தது... ! ?

(தொடர்வாள்....)

# கழக முரசு

## சிறப்பாக வெளிவந்திருப்பது மிக்க மகிழ்ச்சியே!



கவிஞர் பேரா.

நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களே முதல் இதழை வெளியிட்டுப் பெருமை சேர்த்திருப்பது இன்னும் சிறப்பே.

நமது ஆற்றல்மிகு இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் வாழ்த்துரை வழங்கியிருப்பது கூடுதல் மகிழ்ச்சி.

முதல் இதழின் அட்டைப்படமே தூக்கல்தான்.

"இலக்கு நோக்கிய பயணத்தை உங்களது அன்பும், ஆதரவும், அரவணைப்பும் பலமாக்கட்டும் "என்ற ஆசிரியரின் உரையின் நிறைவு வார்த்தைகளில் ஆசிரியர் வாசகர்கள் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையை படம் பிடித்துக் காட்டுகிறது.

இதழின் வடிவமைப்பு உட்பட உள்ளடக்கங்கள் எல்லாம் சிறப்பாக இருக்கிறது.




"தமிழ் இந்தியாவில் பேசப்படும் மொழிகளில் மிக நீண்ட இலக்கிய, இலக்கண, மரபுகளைக் கொண்டது "எனத் தொடங்கும் வழக்கறிஞர் ஆ.கு. நிறைமதியின் "முதல் மொழி தமிழ் "கட்டுரை நான் படித்ததில் எனக்குப் பிடித்த பகுதியாகும். வாழ்த்துகள்மா.

ஆவடியாரின் அனைத்து முயற்சிகளோடு இணைந்திருப்பேன்.

– கவிஞர் பே.ராஜேந்திரன்
தலைவர்,
பொதிகை தமிழ்ச் சங்கம்
திருநெல்வேலி

# நன்னெஞ்சே...!!

## பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே
## பகைவனுக்கு அருள்வாய்

ஞானல நாயகன் பாரதியின் ஞானப் பாடலிது. யாரால் இப்படி சொல்லமுடியும். வியப்பின் வினாக்களோடு வரிகளை மீண்டும் படிக்கும் போது விடை கிடைத்தது. யாரால் இப்படிச் சொல்ல முடியும், பாரதியால் மட்டுமே அப்படிச் சொல்ல முடியும். பகைவனுக்கு'ம்' என்று கூட பாரதி சொல்லி இருக்கலாம். பகைவனுக்கு என்று முடித்தாரே அந்த உணர்வுதான் பாரதி.

> ஒவ்வொன்றிலும் வேற்றுமையென்னும் குறைகளை நோக்கியே பலரின் மனம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

பகைவனுக்கும் என்று சொல்லியிருந்தால் தன்னையும் சேர்த்து அவனுக்கும் என்றாகியிருக்கும். ஆனால் பகைவனுக்கு அருள்வாய் என்று முடிக்கும் போது பாரதியின் உயர்வான நெஞ்சத்தை உணராமல் இருக்கமுடியாது. அதிலும் 'நன்னெஞ்சே... நன்மை செய்கிற நெஞ்சமே நீ பகைவனுக்கு அருள வேண்டும்' என்று தன் மனத்தை தானே இயக்குகிறார்.

தன் மனத்தைத் தானே இயக்கும் ஆற்றல் அனைவரும் பெற்று விட முடியாது. மனத்தை தன் கட்டுக்குள் வைத்திருக்கிற மனிதன் மிகக் குறைவே. பெரும்பான்மையான நேரங்களில் மனிதர்களின் மனங்களை எதிரில் இருப்பவர்களே இயக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

சான்றாக ஒரு துணிக்கடைக்கு சென்று நாம் விரும்பும் நிறத்தில் துணி கேட்டால் அதைத் தவிர்த்து கடைக்காரர் வேறொன்றைக் கொடுத்து அதுதான் நமக்கு சிறந்தது என்று கூறுவார். கடைக்காரர் கூறியதைக் கேட்டு தன் விருப்பம் மறைந்து போய் அவர் கூறிய நிறத்தில் துணியை வாங்கி வந்த பலரை நான் கண்டிருக்கிறேன். இது துணி சார்ந்த விடயம் மட்டும் அன்று, நாம் பயன்படுத்தும் பல பொருட்களை பற்றி யோசித்துப் பார்த்தால் மற்றவரின் எண்ணத் திணிப்புகள் அதில் இருப்பதை உணரலாம். நம் மனத்தை மற்றவர் இயக்கும் நிலையை நம்மையறியாமலேயே மற்றவரிடம் கொடுத்து பழகிவிட்ட நிலை ஒருபுறமிருக்க, மற்றொரு நிலையில் தன்னிடம் இருக்கும் பல நல்ல குணங்களை நினைத்து மகிழாமல் இல்லாத ஒன்றை நினைத்து வருத்தப்படுவதும் மனித மனத்தின் செயலாக இருக்கிறது.

தன்னிடம் மட்டுமல்ல சுற்றியிருக்கும் மனிதர்களிடமும் ஏதோ ஒரு குறையைத் தேடிப் பிடித்து சொல்லிக்கொண்டிருக்கும் மனித மனங்களே இங்கு அதிகம். குறைகளைச் சுட்டிக் காட்டுவது தவறல்ல ஆனால் குறைகளை மட்டுமே கூறி ஏளனப்படுத்துதல் தவறு. மற்றவரை ஏளனப்படுத்தி மகிழும் மனங்களும் இங்குண்டு.





மனத்தைத் தெளிந்த நல்ல சிந்தனையோடு இயக்காமல் நிற வேற்றுமை, குண வேற்றுமையென தொடங்கி ஒவ்வொன்றிலும் வேற்றுமையென்னும் குறைகளை நோக்கியே பலரின் மனம் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் பாரதியின் மனம் அப்படியல்ல. நிறைகளைக் (கொ) கண்டது. மகாத்மா காந்தி அவர்கள் ஒருமுறை தமிழ் மக்களிடம் ஆங்கிலத்தில் உரையாடியதைச் சுட்டிக்காட்டி பாரதி அவருக்குக் கடிதம் எழுதியிருந்தார். பாரதியின் கடிதம் ஆங்கிலத்தில் இருந்தது. 'இதை என்னிடம் சொல்ல தாங்களும் ஆங்கிலத்தில் கடிதம் எழுதியிருக்கிறீர்களே' என்று மகாத்மா சொன்னபோது "ஒருவரின் குறைகளைச் சுட்டிக்காட்ட ஒருபோதும் நான் தமிழ் மொழியைப் பயன்படுத்த மாட்டேன் " என்றாராம் மகாகவி. நம் மொழியை நாம் எவ்வாறு, எதற்கெல்லாம் பயன்படுத்துகிறோம் என்பதை அவரவர் மனத்திடமே விடுகிறேன்.

அனைத்து சூழலிலும் ஒரே நேர்க்கோட்டில் தன் மனத்தை வைத்திருந்தார் பாரதி.

அனைத்து சூழலிலும் ஒரே நேர்க்கோட்டில் தன் மனத்தை வைத்திருந்தார் பாரதி.

மிக வறுமையில் வாழ்ந்தவர். வறுமையின் வலியை முழுமையாய் உணர்ந்தவர் அவர். அந்த வறுமையிலும் 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா.. ' என்று பாடினார். வறுமையிலும் இன்பத்தை உணர அவருடைய மனத்திற்கு மட்டும் முடிகிறதெனில் அதற்குக் காரணம், அவர் மனத்தை அவர் மட்டுமே இயக்கினார். அதிலும் நல்முறையில் இயக்கினார் என்பதும் தெளிவாகிறது. ஒரு செயலை தன் எண்ணத்தோடு இணைத்துப் பார்த்தால் அது நடந்தேறும் என்கிறார்கள் உளவியல் அறிஞர்கள். பாரதியும் தன் நெஞ்சை அப்படித்தான் இயக்கியிருக்கிறார். நல்ல செயல்பாடுகளை மட்டுமே அவர் நினைக்கும்படி பக்குவப்படுத்தியிருக்கிறார். அதிலும் அவரின் மன இயக்கங்கள், எண்ணங்கள், செயல்பாடுகள் அனைத்தும் தன்னைச் சுற்றியிருப்பவர்களுக்காகவும், தன் நாட்டிற்காகவும் இயங்கியது. அதனை அவரது வரிகள் உணர்த்துகின்றன.

பாரதியின் வார்த்தைகளை வாழ்க்கையில் பழக மனத்திற்குக் கற்றுக் கொடுப்போம். நம்மிடமும் சுற்றியுள்ள மனிதர்களிடமும் இருக்கிற நிறைகளைப் பற்றிப் பேசுவோம். நிறைகளையே சிந்திப்போம். நேர்மறை எண்ணங்களை வளர்த்துக்கொள்வோம். நெஞ்சை நன்னெஞ்சாக்குவோம்.

# உலகத்தமிழர் படைப்புகளைத் தாங்கி வரவேண்டும்

**- அமைச்சர் .பாண்டியராஜன்**



கழகமுரசு தமிழிலக்கியத் திங்களிதழ் வெளியீட்டு விழாவில், தமிழ் வளர்ச்சி, தமிழர் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் மாஃப. க. பாண்டியராஜன் இதழை வெளியிட்டு ஆற்றிய வாழ்த்துரையின் போது, ‘‘சொல்லின் செல்வர் அண்ணன் ஆவடிக் குமார் அவர்களுக்கும், உலகத் தமிழர்கள் அனைவருக்கும் வணக்கங்கள். ரொம்ப மகிழ்ச்சியான தருணம், சொல்லின் செல்வர் அண்ணன் ஆவடிக்குமார் அவர்கள் ‘கழகமுரசு‘ என்ற அருமையான, நல்ல தரமான இலக்கிய இதழை இரு வடிவங்களில் வெளி–யிட்டுள்ளார்.

காட்சி ஊடக வடிவில் மின் இதழாகவும், சமூக ஊடகமாக எழுத்து வடிவிலும் கொண்டுவந்துள்ள பணி போற்றுதலுக்குரியது. சொல்லின் செல்வர் தனது பெயருக்கு ஏற்ப இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளார். ஒரு தரமான பத்திரிகையாக, திங்கள் இதழாக, மாதம் ஒரு முறை இதழாக இது வரும் என்று தெரிவித்துள்ளார். முதல் இதழை வெளியிடுவதில் மிகவும் பெருமை அடைகிறேன்.

அதே நேரத்தில் இது ஒரு வெகுஜன இலக்கிய இதழாக வரவேண்டும் என்ற ஆர்வத்தை வெளியிட விரும்புகிறேன். சில இதழ்கள் இலக்கியமாகவே இருந்து விடுகின்றன. அப்படி இல்லாமல் வெகுஜன இலக்கிய இதழாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

உலகத் தமிழர்கள் படைப்புகள் எல்லாம் வரக்கூடிய இலக்கிய இதழாக வரவேண்டும். பல இடங்களில் நான் பேசுகின்ற போது பார்த்திருக்கிறேன். கோவியட் காலத்தில் பல நாட்டு தமிழ்ச்சங்கங்களோடு நல்லுறவு பேணக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. ஸ்காண்டிநேவியா தமிழ்ச்சங்கத்தோடு உரையாடல் நடத்திய போது, அவர்கள் சொன்ன ஒரு முக்கியமான விஷயம் உலகத் தமிழர்களின் படைப்புக்களை வெளியிட ஒரு பிளாட்பாம் ஏற்படுத்த வேண்டுமென்பது, அந்த மாதிரியான, நாடு கடந்து உலகத் தமிழர்களின் படைப்புகளை வெளியிடுவதற்கு "கழகமுரசு" ஒரு தரமான இதழாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

இந்த இதழுக்கு எந்த வகையிலாவது தமிழ் வளர்ச்சித் துறை உதவ வேண்டும் என்று விரும்புகிறேன். இந்த இதழ் சிறப்பாக வருவதற்குக் கண்டிப்பாகத் துணையாக இருப்போம். தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் விசயராகவன் வந்திருக்கிறார். அவர் இந்த இதழுக்கு எந்த வகையில் உதவ முடியும் என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

இந்த இதழ் முழுமையாக வளர்வதற்கு நான் உதவியாக இருப்பேன். வாழ்த்துகள். அன்பு அண்ணன் ஆவடிக்குமார் அவர்களுக்கு நன்றி”

என்று தமிழ் வளர்ச்சி, தமிழர் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் மா. பா. க. பாண்டியராஜன் தன் வாழ்த்துரையில் தெரிவித்தார்.

அனைத்திந்திய தமிழ்ச்சங்கத் தலைவர் மற்றும் அம்மா தமிழ்ப்பீடம் நிறுவனர் "சொல்லின் செல்வர்" ஆவடிக்குமார் தலைமையில் நடைபெற்ற,

காணொளி வழியாக காட்சிப்படுத்தப்பட்ட இவ்விழாவில் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் கோ.விசயராகவன் வாழ்த்துரை வழங்கினார். திருநின்றவூர் ஜெயா கல்விக் குழுமங்களின் தலைவர் பேராசிரியர், முனைவர் கனகராஜ், பேராசிரியர் டேவிட்ராஜன், ஆர்.சி. தீனதயாளன் ஆகியோர் மகிழ்வுரை வழங்கினார்கள்.

**- ஆ.கு. நிறைமதி**

# 'நாம்' ஆவோம் !

**Ego:** என்ற சொல்லைக் கேட்டாலே நம்மில் பெரும்பான்மையோர் அது ஏதோ திமிர் பிடித்தோரைக் குறிப்பிடுவதற்காக... கர்வம் கொண்ட மனிதர்களைச் சுட்டிக்காட்டுவதற்காகப் பயன் படுத்தப்படும் பதம் என்றே எண்ணிக் கொள்கிறோம். அது உண்மை இல்லை!

உளவியலின் தந்தை என்று போற்றப்படும் சிக்மண்ட் பிராய்ட் அவர்களின் உளப்பகுப்புக் கொள்கையை ஆராய்ந்தோம் எனில் ego – என்பது நம் அனைவருக்கும் வேண்டிய குணம் அதுவே உயர்ந்த மனித குணம் என்றே சொல்லலாம்.

என்ன விந்தையாக இருக்கிறதா?

ஆம், நண்பர்களே!

கனவுகளைப் பற்றி ஆராயும் வேளையில் உளப்பகுப்புக் கொள்கையை வெளியிட வேண்டிய அவசியம் பிராய்ட் அவர்களுக்கு ஏற்பட்டது. அதன் அடிப்படையில்.. மனித மனத்தினை நனவு மனம்

Conscious mind

துணை நனவு மனம்

Sub conscious mind

நனவிலி மனம்

Un conscious mind

> **Super Ego தன்மையினர் என்றும் வரிசைப்படுத்தி, வகைப்படுத்திக் காட்டுகிறார்.**

என்று மூன்றாக பிரித்தார் ஆனாலும் பின்னாளில் அவர் மூன்றும் தனிப்பட்டதல்ல ஒன்றையொன்று சார்ந்து தொகுப்பாக இயங்குவது என்றும் தெரி வித்தார். மனிதர்களின் மனவியலை ஆராய்ந்த பொதுப்பண்புகளின் அடிப்படையில்

id....ego.... super ego

என்று மனித மனதின் செயல்பாட்டை இனம் கண்டு அதைப் பின்பற்றி இயங்குவோருக்கு மூவகைப் பெயர்களையும் தந்திருக்கின்றார் இருபதாம் நூற்றாண்டின் பிராய்ட்

இதன்படி நமக்குஎப்போதும் ஆகாத...சமுதாயத்திற்கு ஒவ்வாத... சுயநலம் மற்றும் பாலுணர்வு சார்ந்தே இயங்குவோரை.... அடக்கப்பட்ட கொந்தளிப்பான எண்ணங்களைத் தனக்குள் புதைத்து.... தன்னை எங்கும் எப்போதும் வெளிப்படுத்திக் கொள்ளாதத் தன்மை கொண்டோர்களை...

கீழ்த்தரமான காரியங்கள் புரிவோர்களை..

id மனநிலையினர் என்றும்...

ஏற்றகுணம் கொண்டு சமுதாயத்தோடு பொருந்தி வாழத்தலைப்படுவோர்களை .. ஏற்புடைய வகையில் தன்னை எங்கும் எதிலும் எப்போதும் கட்டுப்படுத்தி வெளிப்படுத்தும் பக்குவம் பெற்றவர்களை....

பொதுநலத்திற்காக தன்னை முன்னிலைப் படுத்திக் கொள்வோரை

ego மனநிலையினர் என்றும்....

பற்றற்ற துறவு நிலை உடையவர்களை... உலக சமுதாய மேன்மைக்காக தன்னையே தந்து காரியங்கள் ஆற்றுவோரை... super ego தன்மை யினர் என்றும் வரிசைப்படுத்தி, வகைப்படுத்திக் காட்டுகிறார்.

அவரைப் பின்பற்றி வந்த யூங் என்பவரும்

எவ்வளவு திறமை இருப்பினும் அதை வெளிக்காட்டிக்கொள்ள தயங்குவோரையும்

சிற்றுளி இராம். கணேஷ்



...

சுய மகிழ்வில் தனக்குத் தானே பெருமைப்பீற்றி சமுதாயத்திலிருந்து தனித்து ஆழ்ந்திருப்போரையும்

அகமுகன்

என்றும்...

தன்னை எப்போதும் மக்கள் சமுதாயத்தில் வெளிப்படுத்தி பொருத்தப்படுத்திக் கொள்வோரை, பயன்கருதி வினைபுரிபவரை புறமுகன் என்றும் பிரித்துக்காட்டுகிறார்.

இவை மேலை நாட்டறிஞர்களின் ஆய்வியல் பார்வை!

இந்த அறிவியல் சார்ந்த உளவியற் கொள்கைகள் பற்றி தமிழ் இலக்கியங்கள் ஏதும் பேசி உள்ளனவா? எவ்வாறு பேசி உள்ளன? என்பதை சுருக்கமாக தொட்டுக்காட்டிட எத்தனிக்கிறது இக்கட்டுரை.

**ஆறறிவதுவே... அவற்றோடு மனமே என்று சொன்ன தொல்காப்பியர் முதல்.....**

**"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"...**

**"மனத்துக்கண் மாசிலன்ஆதல்".....**

**"வெள்ளத் தனைய மலர்நீட்டம்"....**

எனச் சொல்லும் திருக்குறள் வரை அகநூல் களிலும்... புற நூல்களிலும்

பற்பல மனவியல் சார்ந்த செய்திகள் அலை கடலின் மணற்பரப்பாக தமிழ் இலக்கியங்களில் பற்பல இடங்களில் பல்கியும், விரவியும் கிடக்கின்றன.

மனதை ஒரு முகப்படுத்துவதும் அதற்கான பயிற்சி யினையும் வேதாத்ரியம் மிக அழகாகச் சொல்கிறது.

ஆக்கினை தொடங்கி உரிய தீட்சைகள் யாவும் மனவளக்கலையாக இன்று மருவி நிற்கின்றன.

விருந்தோம்பல் பண்பிலிருந்து பிறருக்கு உபகாரம் செய்வதே வாழ்க்கை என்றும்... மனிதத் தொண்டே மகேசத் தொண்டு என்ற சிந்தனை வாதங்களும் நானிலிருந்து நாம் ஆக ஏற்படுத்தப்பட்ட பின்புலக் கட்டமைப்புகள் என்றே கருத வேண்டியுள்ளது.

**"தென்கடல் வளாகம் பொதுமை இன்றி**
**வெண்குடை நிழற்றிய ஒருமையோர்க்கும்**
**நடுநாள் யாமத்துப் பகலும் துஞ்சான்**
**கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்,**
**உண்பது நாழி, உடுப்பது இரண்டே**
**பிறவும் இல்லாம் ஓரொக்குமே,**
**செல்வத்துப் பயனே ஈதல்**
**துய்ப்பேம் எனினே தப்புந பலவே"** (புறம்: 189)

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் இப்படி தன் புறப்பாடல் ஒன்றில் சுட்டுகின்றார்.

வாடிய பயிரைக் கண்ட போது வாடும் வள்ளலார் இராமலிங்கரின் உயர் நேச உணர்வும்....

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் என்ற பாரதியின் கண்டனக் கட்டளையையும்

துவரை உள்ளம்... தொன்னை உள்ளம்.... அன்னை உள்ளம் என்று வரிசைப்படுத்தும் பாவேந்தரின் சிந்தனை களையும் நம் கல்வித் திட்டம் ஆழமாக பதிக்க மறந்ததன் விளைவே விபத்தில் சிக்கியோருக்கு உதவிடும் நிலை மறந்து அதைத் தம்பட்டப்படம் எடுக்கும் பரிதாப அபாய நிலையாகிப் போனதோ என்று ஐயமுறத் தோன்றுகிறது.

நானிலிருந்து நாம் ஆக வேண்டுமானால் ....பட்டப் படிப்புகளுக்கு மாத்திரம் அல்ல!....மருத்துவ பொறியியல், தொழில்நுட்ப, வழக்குரை படிப்புகளிலும் மொழிப்பாட இலக்கியங்கள் பாடத்திட்டத்தில் அவசியம் சேர்க்கப்பட வேண்டும் என்ற ஒற்றைக் கோரிக்கையை இங்கு மிக அழுத்தமாகப் பதிவு செய்கிறேன்.

குறைந்தபட்சம் id மனநிலையிலிருந்து ego மனநிலைக்காவது நம்மை நாமே உயர்த்திட முயலுவோம்.



# தூங்கும் கலைகள்...

## ஏங்கும் விழிகள்...!

குலசை. அ. வேலுப்பிள்ளை

மிகப்பெரிய மலையின் மேல், சந்திரனின், ஒளிக்கதிர்கள் தவழ்வது போல... பலப்பல போர் ஆயுதங்களைத் தன்னகத்தே கொண்டதும், நீண்டு உயர்ந்து பல்லடுக்குகளோடு கூடிய மாடங்களைக் கொண்டதுமான,,,,,, கோட்டைகளைச் சுற்றிலும் கொண்ட ... தஞ்சை எனும் நகரினை நிலவொளியில் ,,, கண்ட,,

கருவூர்த் தேவர் எனும் தமிழ்ப்புலவர் தான் எழுதிய திருவிசைப்பா எனும் நூலில்,,,,

**“அரணம் பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்**
**படுவரை ஞாங்கர் வெண் திங்கள்**
**இலைகுலாம் பதணத் திஞ்சி சூழ் தஞ்சை”**

என்று தஞ்சை நகரினை வர்ணித்திருப்பார்!

திருவிசைப்பா பாடிய காலத்திற்குள் நாம் செல்ல வேண்டாம் ? இப்போது

ஆனால்

கல்லில்லாத ஓர் ஊரில் , மிகப்பெரிய கற்கோவிலொன்றினைக் கட்டி , அதனை இராஜராஜீச்சரம் என்று அழைத்த ஒரு தமிழ் மன்னனின் , பெருங்கனவு நனவானதன், அடையாளமாகத் திகழும் தஞ்சை பெருங்கோவிலுக்குச் செல்லலாமே ?

நாம் அனைவருமே

தஞ்சை பெரிய கோவிலுக்குச் சென்றிருப்போம் !

மிகப்பெரிய நந்தி!

நிழல் விழாத கோபுரம் !

ஒற்றைக் கல் விமானக் கலசம் !

தமிழ் எழுத்துகளின் எண்ணிகையான உயரம் !

என்பன போன்ற, ஆச்சரியக் குறிகளைப் புறந் தள்ளி விட்டு,

”பெரிதினும், பெரிது கேள் ! ” என்ற கவி பாரதியின் சொற்களை இன்றைக்கு ஆயிரத்திருபது ஆண்டுகளுக்கு

> **கல்லில்லாத ஓர் ஊரில், மிகப்பெரிய கற் கோவிலொன்றினைக் கட்டி, அதனை இராஜராஜீச்சரம் என்று அழைத்த ஒரு தமிழ் மன்னன்,**



முன்பே தேடிய , அருள்மொழிவர்மன் எனும், இராஜராஜ சோழர் அவர்களின் தஞ்சை பெருவுடையார் கோவிலுக்குள் நுழைவோம் இன்றைய காலத்தில், முதல் வாயிலாக,, நாம் காண்கிற பிற்காலத்திய வரவேற்பு வளைவினைத் தாண்டியதும்,

கிபி 988 ம் ஆண்டில் கேரள நாட்டினை வென்றதன் அடையாளமாக, அந்த முதல் வெற்றியைக் கொண்டாடும் விதமாக கேரளாந்தகன் என்றழைக்கப்பட்ட, ராஜராஜ சோழரின் பேர் சொல்லும் வண்ணம் பெயரிடப்பட்ட கேரளாந்தகன் திருவாயில் ! என்னும், ஐந்து நிலை மாடங்களுடன், நம் முன் , காட்சி தருவது தமிழகத்தின் முதல் உயரமான கேரளாந்தகன் திருக்கோபுரமாகும்!

இக்கோபுரத்தில், சிவபெருமான், உமையாள் , நான்முகன், திருமால், கணபதி, முருகன்,ஊர்த்துவ தாண்டவர் , காளிதேவி, தென்திசைக்கடவுள்



என பல சிலைகளோடு மகாசதாசிவ மூர்த்தி சிலையும் அழகு செய்கின்ற, கேரளாந்தகன் வாயிலைத் தாண்டியதும்,,, மிகப்பெரிய சுற்று மதிலோடு, மதிலெல்லாம் நந்திகளுடன் கூடிய மூன்று தளங்களுடன் அமைந்த , ஸ்ரீராஜராஜன் திருவாயில் கோபுரம் கண்ணில் படுகிறது !

ஆமாம் !

கோபுரம் கண்ணில் படுகிறது ! இதிலென்ன விஷேசம் என்கிறீர்களா ?

சற்றே பொறுங்கள் !

ஒரே கல்லால் ஆன 4' 3' அளவுடன் 40 அடி உயரமுள்ள இரண்டு நிலைக்கால்கள் கொண்ட, முதல் வாயிலான கேரளாந்தகன் திருவாயில் நிழலில் நின்றபடியே,,,

சோழச்சக்கரவர்த்தி எடுப்பிச்ச ராஜராஜன் திருவாயிலைப் பாருங்கள் !

கோபுரத்திலென்ன ?

சுற்றிலும்,சிற்பங்கள் ! அத்தனையும், அழகானவை ! அவ்வளவுதானே ? என்கிறீர்களா ?

அழகானவை ! பேரழகானவை ! அதுமட்டுமில்லை ! விக்ஷயம் !

ராஜராஜன் திருவாயிலின் இருபுறமும், இரண்டு துவார பாலகர்கள் நிற்கிறார்களே ? அவர்களைக் கவனித்தீர்களா ?

உலகிலேயே,,மிகப்பெரிய எழிலான துவாரபாலகர்கள் மட்டுமல்ல,,, பதினெட்டு அடி உயரமானவர்கள் !

நம்ப முடியவில்லை ? என்கிறீர்களா ?

உண்மை இது,,,! நம்பித்தான் ஆகவேண்டும் !

பிதுங்கிய விழிகள் !

கோரைப்பற்கள் !

வலது கீழ்க்கரம் காட்டும் தர்ஜனி முத்திரை !

வலிமை மிகுந்த உடற்கட்டு !

இவற்றையெல்லாம், நாம் பார்க்கும், போது துவாரபாலகர்களின் பலத்தினையும், பேராற்றலையும், எழிலான முகத்துப் பொலிவினையும், காட்டினாலும், இதழ்களில், ஒரு மெல்லிய புன்முறுவல் ஓடுவதைப் பார்க்கும் போதுதான் தெரியும்,,, சோழ சிற்பிகளின் கை வண்ணம் மட்டுமல்ல ! கலை வண்ணமும்,,,,

இந்த துவாரபாலகர்கள் இருவர் மட்டும் தானே ? என்று நினைந்து விடாதீர்கள் !

இவர்களைப் போன்று பதினெட்டு அடி உயரத்தில், பிரமாண்டமான துவாரபாலகர்கள் பத்து பேர்கள் !

ஆம் ! பத்து பேர்கள் தஞ்சை பெரிய கோவிலில் நிற்கிறார்கள் !

அவர்கள் தான்,,

தஞ்சை பெருவுடையார் என்கிற பரமசுவாமிக்குக் காவல் வீரர்களாய் , துவார பாலகர்களாய், நிற்கிறார்கள் !

நிஜம் தான் !

மிகப்பெரிய மலைகள் இல்லை,,,!

ஏன்,,,? சிறு மலைக் குன்றுகள் கூட இல்லாத தஞ்சைத் தரணியில்,

இத்தனை உயரமாக, இத்தனை அகலமாக, இத்தனை அழகாக , ஒரு கற்கோவிலை,, மட்டுமல்ல,,,!

இத்தனை துவாரபாலகர்களை செதுக்கிய சிற்பிகளை நினைக்கும் போது,,,?

நாமும்,, தமிழர்களாய், இந்தத் தமிழ் மண்ணிலே தான் பிறந்திருக்கிறோம் என்று நெஞ்சம், கொஞ்சம் பெருமிதமடைகிறதே !

அதுதான் இரசனை! தூரத் திலிருந்து கவனித்த ,

அதே இரசனையுடன்,,,

ராஜராஜன் திருவாயிலின் இடதுபுற துவாரபாலகரின் பக்கமாகச் செல்வோம் !

இதுவென்ன ?

துவாரபாலகர் தன் வலது காலினை, கதாயுதத்தின் மேல் வைத்திருக்கிறார் !

அவரது காலடியின் கீழ் உடும்பு ஒன்று ஓடுகிறது !

உடும்பின் அல்லது முதலையின் வாலைப் பிடிப்பது போல நீண்டிருப்பதென்ன ?

அட! யானை ! யானையின் துதிக்கை !

யானையின் துதிக்கை தெரிகிறது ! இரு கால்கள் தெரிகிறது !

மீதமுள்ள உடலும், இரு கால்களுமெங்கே?

ஆ,,,,! பாம்பு !

ஒரு பாம்பின் வாயில், உலகின் மிகப் பெரிய விலங்கான யானை அகப்பட்டுக் கொண்டிருக் கிறது !

யானையை ஒரு பாம்பு விழுங்குகிற தென்றால்? அது எவ்வளவு பெரியதாக இருக்கும் ? அந்தப் பாம்பினை காலில் அடக்குகிறவர் எவ்வளவு பெரியவராக இருப்பார் ?

இதனையெல்லாம்,,,,

துவாரபாலகரின் காலடியில் அமர்ந்து சிங்கமொன்று வேடிக்கைப் பார்த்துக் கொண் டிருக்கிறது !

முதலை, யானை, பாம்பு, சிங்கம், என இத்தனை விலங்குகளின் செயல்களும், தன் காலடியின் கீழ் நடந்த போதும், இதழ் சிந்தும், புன்னகையுடன், இடது பின் கரம், எம் பின்னே எம்மான் அவர் இருக்கின்றார் ! கவனமாகச் செல்லுங்கள் ! கண்குளிரக்காணுங்கள் என்று சொல்வது போல், நீட்டியபடி,, புன்னகையோடு பிரம்மாண்டமாய் நிற்கின்றார்!

பெரிய கோவில் என்பதன் பேருரு எவ்வளவு பெரிதெனக் காட்டுவதற்காக, வடிக்கப்பட்ட சிலை ! இதுவெனப் புரிகிறதா ?

திகைக்காதீர்கள் !

**“ஒரு பாம்பின் வாயில்,,உலகின் மிகப் பெரிய விலங்கான யானை அகப்பட்டுக் கொண்டிருக்கிறது !”**

இதைவிடவும், திகைப்பானவர் உள்ளே இருக்கிறார் ! என்கிற நினைவுடன் , கேரளாந்தகன் வாயிலைக் கடந்து,,,

தட்சிண மேரு என்று அழைக்கப்படும்,,,,

உலகிலேயே,,முதன் முதலாக மிக உயரமாகக் கட்டப்பட்ட,,,,

அதுவும் சாந்து, சுண்ணம், சிமெண்ட், என்கிற எந்தவிதமான ஒட்டுக் கலவைகளும், இல்லாமல்,,, கற்களால் மட்டுமே,, கட்டப்பட்ட தஞ்சை இராஜராஜீச்சரத்து விமானம் பிரம்மாண்டமாய்,,

அதுவே பரசிவ வடிவமாய் நம் முன் காட்சி தருகிறது !

அந்த பிரம்மாண்டத்தின் முன்,,,

மனிதர்கள் ! நாம் கொஞ்சம், அடங்கிப் போகிறோம் தான் !

மெல்ல, மெல்ல,

நந்தி மண்டபம், தாண்டி, தஞ்சை பெருவுடையாரைத் தரிசிக்க , செல்வோமா !

இன்றைய தஞ்சைக் கோவிலின் முன்புள்ள, நாயக்கர் கால கிழக்கு வாயில் படிக்கட்டுகளைத் தவிர்த்து விட்டு,

சிவபாதசேகரனான ஸ்ரீராஜராஜர் காலத்திய வட, தென் திசை படிக்கட்டுகளின் வழியாகவே செல்லலாமே !

இப்போது,

நாம், மெல்ல, மெல்ல, முக மண்டபத்தின் தென் திசைப் படிக்கட்டுகளின் வழியாகப் படியேறுகிறோம்.

படிக்கட்டுகள் ஏறியதும், முக மண்டபத்தின் சுவற்றின் இருபுறமும் பதினெட்டு அடி உயரத்தில் துவாரபாலகர்கள் இருவரும், தம் கரத்தில் எச்சரிக்கை காட்டும் தர்ஜனி முத்திரையும், அபயமும், மேலுயர்த்திய கரத்தில், விஸ்மய முத்திரை காட்டி உள்ளே இருக்கும் ஈசன், மிகப்பெரியவர் என்று அடையாளம் காட்டி நிற்கின்றனர் !

ஆ ! இதுவென்ன ?

யானையை விழுங்கும் பாம்பு...!

ராஜராஜன் திருவாயிலின் இட புறத்தில் பார்த்த துவார பாலகரைப் போன்றே...?

இங்கேயும்... ? இடது புறத்தில்...

ஆனால்... அங்கிருப்பவரை விட, மிகத் தெளிவாக... !

கிரீட மகுடங்கள், காதுகளில் குழைகள் !

எப்பொழுதும் விழிப்புடன் இரு என்று அறிவுறுத்த குழைகளின் உள்ளே, ஆந்தைகள்!

கழுத்தணி, கேயூரம், உதரபந்தம், புரிநூல், இடுப்பினை அலங்கரிக்கும், அழகு ஆடைகள் ! கைகளில் காப்புகள் !

காலில் மணி கோர்த்த அணிகள் என அழகுக்கு அழகூட்டும் , காண்போர் வியக்கும் அழகான துவாரபாலகர் !

உலகில் மிகப்பெரியதும், வலிமையானதுமான விலங்கு யானை !

அந்த யானையையே , ஒரு பாம்பு விழுங்குகிறதென்றால் ?

அந்த பாம்பு எத்துணை வலிமையுடையதாக இருக்கும் !

மிகப்பெரிய யானையை , தன் கூரிய பற்களால் விழுங்குகிற, வலிமையுடைய , பாம்பினையே, தன் வலது காலால் அழுத்தி அடக்குகிற வீரனாக, இடது கரம் தாங்கும் கதாயுதத்தின் மேல் வைத்தபடி ஒய்யாரமாக நிற்கிறார் .

காலின் கீழ் கொடும் பாம்பினை அழுத்திக் கொண்டிருக்கும் நேரத்திலும்,

அதுவும், எதுவும் நடவாதது போல.. புன்னகைக்கிறானென்றால்.. ! அவன்

எத்துணை வீரமும், வலிமையும், உடையவனாக இருக்க வேண்டும் ?

ஒரு காவல் வீரனே!

இந்த அளவிற்கு வலிமையுடையவனாக, இருக்கிறான் ! என்றால்...?

அந்தக் காவல் வீரனின் தலைவன் !

எவ்வளவு வலிமை உடையவனாக இருத்தல் வேண்டும் ?

இதனையெல்லாம், ஒப்பிடும்போது,,,

> **தஞ்சை இராஜராஜீச்சரத்தில் வீற்றிருக்கிற பெருவுடையார் ! எவ்வளவு மகாப் பெரிய இறைவன் !**

தஞ்சை இராஜராஜீச்சரத்தில் வீற்றிருக்கிற பெருவுடையார் ! எவ் வளவு மகாப் பெரிய இறைவன் !

தென்னாடுடைய சிவன் !

எந்நாட்டவர்க்கும், இறைவன்! என்று போற்றப் படுகிற இறைவன்!

தஞ்சை பெருவுடையார் என்னும் இறைவன், மிகப் பெரியவர்! என்பதனை துவார பாலகரின் சிலையைக் காட்டி உணர்த்துகின்ற விதத்தினைக் காணும் போது நெஞ்சம் மலர்கிறது !

இது எப்படி ?

இந்த சிந்தனை எப்படி ?

**"புரிகொள் சடையார் அடியார்க்கு எளியார் கிளிசேர் மொழி மங்கை ,**

**தெரிய உருவில் வைத்து உகந்த தேவர் பெருமானார்**

**பரிய களிற்றை அரவு விழுங்கி மழுங்க இருள் கூர்ந்த**

**கரியமிடற்றர் செய்ய மேனிக் கயிலை மலையாரே !"**

என்று திருக்கயிலாயப் பதிகத்தில், திருஞானசம்பந்தப் பெருமான் பாடிய பாடல்... ராஜராஜருக்கும், சிற்பி குஞ்சரமல்ல பெருந்தச்சருக்கும், தோன்றி இருக்குமோ ?

இந்நேரத்தில்,,, தூங்கும் கலைகளை, ஏங்கும் விழிகளோடு

தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டிய இராஜராஜ சோழர்!

பெருங்கோவிலின் தலைமைசிற்பி வீரசோழ குஞ்சரமல்ல ராஜராஜ பெருந்தச்சன் !

மதுராந்தகனான நித்த விநோத பெருந்தச்சன்

இலத்தி சடையனான கண்டராதித்த பெருந்தச்சன் ! இவர்களையும் நினைத்த படியே,,, தஞ்சைப் பெருவுடையாரான பரமசுவாமியை வணங்கி வருவோமா...

கவிமாமணி சாந்தி திருநாவுக்கரசு

# கழக முரசு திங்களிதழ்!



❖ இலக்கிய விருந்தினில் ஈடில்லை...
இதற்கொரு இணையாய்
இதழுமில்லை!
கழக முரசு திங்களிதழ்!

❖ கருக்களின் உறைவிடம்..
கவிதையின் புகலிடம்!
புதுமையின் விளைநிலம்!
கழக முரசு திங்களிதழ்!

❖ பரவசம்... படிப்பதில்!
பலகளம்... பகிர்வதில்!
திளைக்குதே... மனமதில்!
கழக முரசு திங்களிதழ்!

❖ ஆக்கத்தில் ஆழ்கடல்!
ஆட்கொண்ட பேரிதழ்!
அருஞ்சுவைப் படைப்பென...
கழக முரசு திங்களிதழ்!

❖ வழங்கிய நல்லதொரு...
கழகத்தின் கவியுலா
கறையில்லா... பிறையென
கழக முரசு திங்களிதழ்!

❖ சேவைக்கு மகுடமாய்..
தமிழ்ப்பணி சிகரமாம்...
ஆவடியார்... தரும்
கழக முரசு திங்களிதழ்!

❖ தேன்பலா படைப்புகள்
வான்நிலா சிறப்புகள்
முழுவதும் முத்தென...
கழக முரசு திங்களிதழ்!

❖ ஊடகக் காட்சியாய்
உள்ளம் விரும்பும்
மாட்சியாய்...
உலகின் நிசங்களைத்
தந்திடும் தருவென...
கழக முரசு திங்களிதழ்!

❖ முதுமொழித் தமிழ்நயம்...
தழைத்திடும் ஒரு தளம்!
தேர்ந்த நல்கவிப்புலம்..
கழக முரசு திங்களிதழ்!

❖ செறிவுற்ற கருத்துக்கள்
செழுமையாய்
வித்துக்கள்...
நடுகின்ற பாங்கினில்..
கழக முரசு திங்களிதழ்!

❖ மலைத்திடும் பதிவுகள்...
ஊக்கத்தின் ஊற்றென
நல்கிடும் வாய்ப்புகள்!
கழக முரசு திங்களிதழ்!

❖ அட்சய செய்திகள்
அமுதென பொழிந்திடும்...
வியப்பினில் கண்விழி
துயிலவும் மறந்திடும்!
கழக முரசு திங்களிதழ்!



சென்னை ரேவதி ராதாகிருஷ்ணன்

# தமிழர்களின் திறமையும் பெருமையும்!

கடல்கடந்தும் பரவியிருந்த தமிழன் ஆற்றலினால் கட்டப்பட்டது தான் கம்போடியாவில் இன்றும் இருக்கும் அங்கோர்வாட் என்றழைக்கப்படும் தேவநகரம். இரண்டாம் சூரிய வர்மன் என்ற தமிழ் மன்னன் கம்போடியாவை கைப்பற்றிய போது அங்கு உள்ள அங்கோர்வாட் என்ற இடத்தில் உலகின் மிகப் பெரிய கோயிலை கட்டியுள்ளான். இன்று வரை உலகில் கட்டப்பட்ட வழிபாட்டுத் தலங்களிலேயே இது தான் மிகப் பெரியது.

இக் கோயிலில் திரும்பிய திசையெல்லாம் சிற்பங்கள் தான். இந்த கோயிலின் நான்கு பக்க சுற்று சுவர்களும் முறையே 3.6 கிலோ மீட்டர்கள் நீளமுடையவை. 40 ஆண்டுகளில் இது கட்டி முடிக்கப் பட்டுள்ளது. இன்றைய காலகட்டத்தில் இது சாத்தியமா என்பது கேள்வி. முன்னதாக பகவான் விஷ்ணுவுக்காக கட்டப்பட்டு பின் 1415ம் நூற்றாண்டில் அது புத்த கோயிலாக மாற்றப்பட்டுள்ளது.

இது உலக கட்டிடக்கலை வல்லுநர் வியக்கும் ஓர் படைப்பு கம்போடியாவின் அங்கோர்வாட் ஆலயம். 500 ஏக்கரில் பரந்திருக்கும் இந்தக் கோயிலை ஒரு கலைப் பொக்கிஷமாக பாதுகாக்கப்படுகின்றது.

இந்தக் கோயிலின் ஒரு பக்கச் சுற்றுச் சுவரின் நீளம் மூன்றரை கிலோமீட்டர்..

மேலும் பூமியிலிருந்து சுமார் 1000 அடி மேலே சென்று வானத்திலிருந்து படம் எடுத்தால் மட்டுமே இக்கோயிலை முழுமையாகப் படம்பிடிக்க முடியும்.

1000 அடி உயரத்தில் இருந்து பார்த்தால் மூன்று அடுக்குகளாகத் தோற்றமளிக்கிறது இக் கோயில்.

முதல் அடுக்கில் உள்ள சுவரில் ராமாயணம், மகாபாரதக் காட்சிகள் சிற்பங்களாக உள்ளன.

இரண்டாம் அடுக்கின் நான்கு திசைகளிலும் பெரிய சதுர வடிவத் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன.

மூன்றாம் அடுக்கில் விண்ணை நோக்கி உயர்ந்துள்ள ஐந்து கோபுரங்களாகக் காட்சி தருகிறது. மேலும், இக்கோயிலுக்கு மிகப் பெரிய நான்கு நுழைவுவாயில்களும் உள்ளன.

கெமர், திராவிடக் கலைகளைக் கொண்டு இக் கோயில் கட்டப்பட்டுள்ளது. கம்போடிய அரசின் தேசியக் கொடியில் தேசியச் சின்னமாகப் பொறிக்கப் பட்டுள்ளது இக்கோயிலின் தனிச்சிறப்பாகும்.

> இந்தக் கோவில் 66 மீட்டர் உயரமும், பல தளங்களும் கொண்ட மிகவும் உறுதியான கருங்கற்களான கோவில்.

2ம் சூரியவர்மன் அங்கோர் வாட்டை முதலில் கட்டிய விஷ்ணு கோயிலை, சூரியவர்மன் இறந்த பிறகு ஆட்சிக்கு வந்த ஏழாம் ஜெயவர்மன் இதை பவுத்தக் கோயிலாக மாற்றினார்.

உலகிலேயே இல்லாத கட்டிட அமைப்பு கொண்டது. உலகில் உள்ள அனைத்து பிரமிடுகளின் கற்களைவிட இந்தக் ஒருகோவிலில் உள்ள கற்கள் அதிகம்.



தமிழனின் ஆற்றலுக்கும் பெருமைக்கும் இக்கோவில் ஒரு சான்றாகும்.

## தமிழகத்தில் தமிழனின் வரலாறு

குமரிக்கண்ட அழிவுக்கு பின்னர் 2000 வருடங்களுக்கு முன்னர் ஆண்ட சோழர் பரம்பரையினரால் மீண்டும் தமிழகத்தில் தமிழன் பெருமை மீண்டெழ ஆரம்பித்தது. இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் காவிரியாற்றின் குறுக்கே கல்லணை கட்டிய கரிகால்சோழனில் ஆரம்பித்து சோழர்களின் ஆட்சி தழைத்தோங்க ஆரம்பித்தது. ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் கட்டிய தஞ்சாவூர் பெருவுடையார் கோவில் தமிழர் அறிந்து வைத்திருந்த கட்டிடக்கலையின் உச்சம். தெற்காசியாவிலேயே மிகப்பெரிய கோவிலான இது உலகிலேயே மிகப்பெரும் சிவலிங்கத்தைக் கொண்ட கோவில். இந்தக் கோவில் 66 மீட்டர் உயரமும், பல தளங்களும் கொண்ட மிகவும் உறுதியான கருங்கற்களான கோவில். மேலேயுள்ள கும்பக்கல் கோபுரம் 80 டன் எடையுள்ளதாக கூறப்படுகிறது. இக்கோவிலில் உள்ள நந்தி ஒரே கல்லாலான 20 டன் எடையுள்ளது. கோவில் முழுக்க உள்ள கற்களின் எடை 60,000 டன். கற்களே கிடைக்காத இடத்திலிருந்து 60 கி.மீ அப்பால் சென்று கற்கள் எடுத்து வந்து வெறும் ஏழு ஆண்டுகளில் கட்டிமுடிக்கப்பட்ட கோவிலாக சொல்லப்படுகிறது. வெறும் ஐந்தடி ஆழமே கொண்ட கடைக்கால் போடப்பட்டதாக கூறப்படுகிறது. பெருமணலை கொட்டி புவி ஈர்ப்பு விசையறிந்து இக்கோவில் ஐந்தடி கடைக்காலுடன் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. கோபுரத்திலுள்ள கும்பினியாரின் சிலையும் சீனத்து மனிதரின் சிலையும் சோழர்களுடன் அவர்களுக்கு இருந்த தொடர்பா? என்பது ஆராய்ச்சிக்குட்பட்டது.

இக்கோவில் மட்டுமல்லாமல் ஐம்பூதங்களான நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு இவற்றிக்கென ஈஸ்வரன் கோவில்களும் புவியியல் அமைப்பு தெரிந்து ஒரே நேர்க்கோட்டில் அமைந்துள்ளதாக கூறப்படுகிறது. வாய்வு தளமான காளஹஸ்தி, நிலத்திற்குண்டான காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில், நீர்த்தலமான திருவானைக்காவல் ஐம்புகேஸ்வரர், ஆகாய தளமான சிதம்பரம் நடராஜப்பெருமானும், நெருப்புத்தளமான திருவண்ணாமலை கோவிலும் ஒரே நேர்க்கோட்டில் அமையப்பட்டிருப்பது தமிழ் மன்னர்களின் அறிவாற்றல். இராமேஸ்வரம் இதே நேர்க்கோட்டில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

அயல்நாடுகளில் பின்னர் அறிந்திருந்த தொலைநோக்கியையும் புவி ஈர்ப்பு விசையையும் டார்வின் கொள்கைகளை அன்றே தமிழன் அறிந்து வைத்திருக்கிறான். நீரினில் ஆரம்பித்த ஒரு செல் உயிரி படிப்படியாக எவ்வாறு பரிணாம வளர்ச்சி பெற்றது என்பதை தசாவதார கோலங்களாக கோவில்களில்

சிலையாக வடித்துள்ளார். மேலும் நம் ஐந்து புலன்களையும் இயக்குவது கோள்கள்தான் எனவும், அவைகளின் சுழற்சியில் பாதிப்பு ஏற்படும்போது நம்புலன்களும் பாதிக்கப்படும். நம் கண்ணிரண்டும் சூரியன் சந்திரன், காது இரண்டும் செவ்வாய் புதன், மூக்கு துவாரங்கள் இரண்டும் வெள்ளி சனியும், நாக்கும் வாயும் வியாழன், முன்பின் துவாரங்கள் ராகு கேது ஆதிக்கத்தில் இருக்கின்றன. இந்தக்கிரக அமைப்பையொற்றியே நம் உடல்நிலையும் மனநிலையும் மாறுகிறது என்று கண்டறிந்தான், மேலும் சூரியக்கதிரில் ஏழுநிறங்கள் உண்டென்றும் அவை முறையே கருப்பு, நீலம், பச்சை, சிவப்பு, மஞ்சள், வெள்ளை, நிறமற்ற தன்மையென கோவில்களில் சப்தகன்னியராக வடிவமைத்தான். சாத்திரம் பொய்யென்றால் கிரகணத்தை பார் என்று கூறியதோடு அல்லாமல், கிரகணவேலையில் உணவு உண்ணக்கூடாது, உடலில் காயம் ஏற்படக்கூடாது, கதிர்வீச்சின் தன்மை அதிகமாகும் காரணத்தினால் உடம்பில் பாதிப்பினை ஏற்படுத்தும் என்ற அறிவியலை அழகாகச் சொல்லிவைத்தான். தர்பை புல்லிற்கு மட்டுமே அந்த கதிர்வீச்சை தடுக்கும் சக்தி உண்டடென்றும் சொல்லிவைத்தான்.

> **சிதம்பரம் நடராஜரின் கால்கட்டைவிரலுக்கு கீழ்தான் பூமியின் மையப்புள்ளி உள்ளதாக கூறப்படுகிறது**

தமிழ் மன்னர்கள் அரசியலோடு ஆன்மிகம் அரசியல், புவியல், பண்பாடு, கலாச்சாரம் அனைத்தையும் ஒருசேர மக்கள் அதிகமாக வந்துப்போகும் இடமான கோவிலில் வைத்தனர். சிதம்பரம் நடராஜரின் கால்கட்டைவிரலுக்கு கீழ்தான் பூமியின் மையப்புள்ளி உள்ளதாகக் கூறப்படுகிறது. மேலும் நடராஜரின் வலது கையிலிருந்து இடதுகால் பாதம் வரையுள்ள தூரமே அண்ட வெளியில் பால்வெளி மண்டலம் எனப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இக்கோவிலின் பொன்வேய்ந்த கூரையிலிருக்கும் 21,600 தங்க ஓடுகள் நாம் ஒரு நாளிற்கு உள்ளிழுக்கும் மூச்சுக்காற்றுயெனவும், அந்த ஓட்டினில் உள்ள 65,000 தங்க ஆணிகள் நம் உடலில் உள்ள நாடிநரம்புகளெனவும் கூறப்படுகிறது. பழனி தண்டாயுதபாணி சிலையும் திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் சிலையும் போகர் என்ற சித்தர் அருளிய நவபாஷாண சிலைகள். இச்சிலைகளின் அபிஷேகநீர் நோய் தீர்க்கும் மருந்தாகும். திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் தூண்களில் தட்டினால் சரி கம பதநி என்னும் சப்த சுவரங்கள் வெளிப்படுவதும். திருப்பூரில் வடுகநாத பைரவ கோயிலில் கருவுற்றிருக்கும் தாயின் வயிற்றில் உள்ள குழந்தை ஒவ்வொரு மாதமும் எவ்விதம் வளர்ச்சியுறுகிறது என்பதைத் துல்லியமாக செதுக்கி இருப்பதும் கங்கை கொண்ட சோழபுரத்தின் கோவில் கருவறையில் சந்திரகல் குளிர்ச்சியுடன் அமைக்கப்பட்டிருப்பதும், பஞ்சவர்ணேஸ்வரர் லிங்கம் ஒரு நாளைக்கு ஐந்து முறை நிறம் மாறுவதும் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் ஓசோன் படலத்தின் ஓட்டையினால் பிற்காலத்தில் ஏற்படும் விளைவுகளையும் , ஒவ்வொரு கோவிலின் சிறிய சிலை வடிவமாய் மனித உடலின் மரபணுவின் செயல்பாட்டை எதிரும் புதிருமான பாம்புகளின் பிணைப்பால் வெளிப்படுத்தி இருப்பதும் நம் முன்னோர்கள் அறிவியல், புவியியல், கட்டிட கலை, கணித வியல், வானவியல் என அத்துணை கலைகளிலும சிறப்புற்று விளங்கினர் என்பது தெரிகிறது.மேலும் சீவகசிந்தாமணியில் பொறியுடன் கூடிய பறக்கும் கூடையில் காட்டில் வந்திறங்கிய அவனது தாய் சீவகனைக் காட்டில் பெற்றெடுத்ததும் , கம்ப ராமாயணத்தில் ராவணன் வந்த தேர் புவி ஈர்ப்பு விசையை முறித்துக் கொண்டு மேல் எழும்பியதாக எழுதபட்டிருப்பதும் மாமல்லபுரத்தில் ஏவுகணை போன்றதோர் ஊர்தி செதுக்கப்பட்டிருப்பதும் தமிழன் ஆயக்கலைகள் அறுபத்து நான்கிலும் சிறந்து விளங்கினான் எனத் தெரிகிறது. தஞ்சாவூர் பிரஹதீஸ்வரர் ஆலயத்தில் பரத நாட்டிய முத்திரைகளை செதுக்கி, யோக கலையை சித்தனான சிவன் நமக்கு அருளிசென்றதாய் நம்படுகிறது.

**"வரப்பு உயர நீர் உயரும்**
**நீர் உயர நெல் உயரும்**
**நெல் உயர குடி உயரும்**
**குடி உயர கோன் உயரும்"**

என்ற பதத்திற்கு ஏற்ப அனைத்து மக்களும் மகிழ்ச்சியாக இருந்ததனாலயே மன்னர்களுக்கும் எல்லா சாதனைகளும் சாத்தியமாயிற்று.

**‘உறவு’ என்ற சொல் பொருத்தம், சுற்றம், நட்பு, என்னும் பல பொருள்களைக் குறிக்கின்றது. உறவு என்பது இரண்டு மனிதர்களிடையே உள்ள தொடர்பைக் குறிக்கிறது. ஒரு மனிதன் பல்வேறு மனிதர்களுடன் பல்வேறு நிலைகளில் தொடர்பு கொள்கின்றான். இந்த மனிதத் தொடர்புகளே மனித உறவுகள் (...) எனப்படுகிறது. இங்கு நாம் குறிப்பிடுவது இரத்த உறவுகளை அல்ல. மனிதன் கூடி வாழும் இயல்புடையவன். எந்த ஒரு மனிதனும் பிறர் உதவி-யின்றி வாழ முடியாது.**



ஒருவரை ஒருவர் சார்ந்து தான் வாழ முடியும். அன்றாடம் நாம் சந்திக்கும் உறவுகளின் எண்ணிக்கை மிக அதிகம். அந்த உறவுகளிடம் நாம் எல்லோரிடமும் ஒரே மாதிரியாகப் பேசுவதும் பழகுவதும் இல்லை. ஒவ்வொரு உறவிற்கும் ஒரு வரையறை உண்டு.

ஒருவருக்கு ஒருவர் அளிக்கும் மரியாதை. விட்டுக் கொடுக்கும் மனம், மன்னிக்கும் பண்பு, பிறருக்கு உதவும் குணம், நல்ல எண்ணங்கள் மற்றும் செயல்கள் தான் உறவுகளைத் தீர்மானிக் கின்றன. இவை மட்டுமின்றி ஆறுதலான வார்த்தைகளும் அன்பான புன்னகையும் உறவை ஏற்படுத்துகின்றன. உடல் நலமில்லாத ஒருவரை நாம் சந்திக்கும் போது அவரிடம் ஆறுதலான நல்ல நேர்மறை எண்ணங்கள் கொண்ட வார்த்தைகளை பேசும் போது அவருக்கு மனதளவில் தைரியம் ஏற்பட்டு விரைவில் குணமடைய வாய்ப்பு அதிகமாகிறது.

மக்கள் தொகைப் பெருக்கமும் தொழில்நுட்ப வளர்ச்சியும் மனித உறவுகள் அதிகரிக்க காரணமாக அமைகின்றன. மனித உறவுகள் அதிகமாகி விட்டதால் அதில் எதிர்பாராத சிக்கல்களும் ஏராளம். நல்ல செயல்களும் நல்ல எண்ணங்களாலும் நல்ல வார்த்தைகளாலும் தான் ஒருவர் நல்ல உறவுகளைத் பெற முடியும். எனவே சூழலும் மனநிலையும் இதில் பெரும் பங்கு வகிக்கின்றன. நம்முடைய சூழ்நிலைகளால் ஏற்படும் தாக்கத்தை கட்டுப்படுத்தும் நபராக நாம் இருக்க வேண்டும். இதற்கு இப்போது நமக்கு கை கொடுப்பவை நல்ல இனிமையான சொற்களே என்றால் அது மிகையல்ல.

**"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்ப காய் கவர்ந்தற்று"**

இனிய சொற்கள் இருக்கும்போது அவற்றை விடுத்துக் கடுமையான சொற்களைப் பேசுவது சுவைமிகு கனிகள் இருக்க அவற்றை விட்டு காய்களைப் பறித்து உண்பது போன்றதாகும் என்கிறார் திருவள்ளுவர்.

ஒருவரை ஒருவர் சார்ந்து வாழும் போது சில விருப்பு வெறுப்புகளை விரைவில் சந்திக்க நேரிடுகிறது. நல்ல உறவு நிலை வேண்டுமெனில் நாம் நல்ல வார்த்தைகளைப்

முனைவர் சி.முத்துமாலை

# மனித உறவுகளை மதிப்போம்!



> ஆறுதலான வார்த்தைகளும் அன்பான புன்னகையும் உறவை ஏற்படுத்துகின்றன.

பேசவேண்டும். ஒத்தப் பண்புடையவர்களும் முரண்பட்ட பண்புடையவர்களும் சமுதாயத்தில் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளும்போது உறவுகளுக்கு இடையே உள்ள சிக்கல்கள் உலகம் தழுவிய ஒரு சிக்கல்களாக இருப்பதால் மனித உறவுகளைப் பற்றிய இன்றையக் காலகட்டத்தில் மிக அவசியமாகின்றன.

நம் தமிழ் இலக்கியங்கள் அறத்தைப் போலவே அன்பையும் கற்பிக்கின்றன. நல்லுறவுகள் நீடிக்க வேண்டுமானால் பிறர் மனம் புண்படும் படியான வார்த்தைகளைப் பேசக்கூடாது. கல் கூட தேய்ந்து மறையலாம். ஆனால் கடுஞ் சொல் மறையாமல் உறவுகளை முறியச் செய்யும் என்கிறது பழமொழி நானூறு.

**"கெடுவல் எனப்பட்ட கண்ணும் தனக்கு ஓர்**
**வடு அல்ல செய்தலே வேண்டும்நெடுவரை**
**முற்று ணீர் ஆழி வரையகத்து ஈண்டிய**
**கல்தேயும் தேயாது சொல்"**

நாம் பேசும் சில கடுமையான வார்த்தைகள் உறவுகளை வளர விடாமல் சிதைத்துவிடும். கடுஞ்சொற்களால் பிரிந்த குடும்பங்களையும் வலி தந்த சொற்களால் பிரிந்த நட்புகளையும் நம் அன்றாட வாழ்வில் காண்கிறோம். எப்போதும் யாரையும் எள்ளி நகையாடக் கூடாது என்றும் யாரையும் இகழ்ச்சியாக எண்ணுதல் தவறு என்று நான்மணிக்கடிகை கூறுவது இதனுடன் ஒப்பு நோக்கத்தக்கது.

**"எள்ளற்க என்றும் எளியர் என்று என்பெறினும்**
**கொள்ளற்க கொள்ளார் கைமேற்பட உள்சுடினும்**
**சீறற்க பிறந்தாரைக் கூறற்க**
**கூறல்லவற்றை விரைந்து"**

என்ற வரிகளால் இதனை உணரலாம். கேட்பவரைத் தன் வசப்படுத்துவது நல்ல சொற்கள். எனவே சொற்களின் பயன்பாட்டில் நாம் அதிகம் கவனம் கொள்ளுதல் வேண்டும்.

**"நெல்லைக் கொட்டினால் அள்ள முடியும்**
**சொல்லைக் கொட்டினால் அள்ள முடியாது"**

என்பது கிராமத்துப் பழமொழி. மகாகவி பாரதியும் 'வாக்கினிலே இனிமை வேண்டும்' என்கிறார். சொற்கள் மனிதர்களின் மகிழ்ச்சியையும் துன்பத்தையும் வெளிப்படுத்தும் தன்மை வாய்ந்தவை. நம்மை யார்? என்று அடையாளப் படுத்துவது நம் வாயிலிருந்து வரும் சொற்கள் தான்!

அரசு கட்டிலில் துயின்ற புலவர் மோசிகீரனுக்கு சேரமன்னன் இரும்பொறை கவரி வீசியதும் அவ்வைக்கு அதியமான் ஆயுள் நீட்டிக்கும் நெல்லிக்கனியைக் கொடுத்ததும் அவர்கள் மனித உறவுகளை மிக உன்னதமாகப் போற்றுவதை நமக்குப் புலப்படுத்துகின்றன.

**"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின்"**

என்று நரிவெரு உத்தலையார் நன்மை செய்யா விட்டாலும் பரவாயில்லை. தீமை செய்யாது இருத்தலே நலம் என்பதை புறநானூற்றுப் பாடலின் வாயிலாக சுட்டிக் காட்டுகிறார். உறவுகளுக்கிடையே சிக்கல்கள் ஏற்படாமல் இருக்க மேற்கொள்ள வேண்டிய தலையாய அறிவுரையாக இதனை ஏற்கலாம்.

> **சொற்களின் வாயிலாக உலகை வென்றவர் சரித்திரத்தை நாம் குழந்தைகளுக்கு கற்பிக்க வேண்டும்.**

மனித உறவுகளைப் போற்றுவதற்கு அடிப்படையாக விளங்கும் நல்ல சொற்களை நாம் பேசுவதால் வருங்கால சந்ததியினர் நம்மைக் கண்டு அவ்வாறே பின்பற்றி நடப்பார்கள். சொற் களின் வாயிலாக உலகை வென்றவர்களின் சரித்திரத்தை நாம் குழந்தைகளுக்கு கற்பிக்க வேண்டும். நல்ல எண்ணங்கள் கொண்ட மனதில் இருந்து வரும் வார்த்தைகள் அனைவரின் மனதை ஈர்க்கும். அன்பாகவும் இனிமையாகவும் பேசும் அவர்கள் சொல்லும் பணிகளை விரைந்து முடிக்க உலகமே காத்திருக்கும்.

**"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது**
**சொல்லுதல் வல்லார்ப் பெறின்"**

என்கிறார் தெய்வப்புலவர் திருவள்ளுவர்.

அன்பை நாம் பல பரிமாணங்களில் வெளிப்படுத்தினாலும் சுயநலமின்றி பிறர்நலம் கருதி பிறர் மனம் நோகாமல் நாம் பேசும் சொற்களே அதில் முதலிடம் பெறுகின்றன. எனவே நல்ல சொற்களால் பிறர் மனங்களை வெல்வோம்! மனித உறவுகளை மதிப்போம்!

கோஊர் த.ஹேமாவதி

# இயற்கை போற்றும் ஆவடியார்




புரவிகளின் கூட்டந்தாம் இவரைக் கண்டால்
......பெரியமரு திவரென்றே வணங்கி நிற்கும்!

திரண்டெழும்பும் கருமுகில்கள் இவரைக் கண்டால்
......தன்னைவிஞ்சும் வள்ளலிவ ரென்றே சொல்லும்!

விருந்தாகக் கண்ணுக்குத் தோகை கொண்ட
.......வண்ணமயில் பேகனென்று மகிழ்ந்து சொல்லும்!

பெரியகோவில் கோபுரந்தான் இவரைக் கண்டால்
......பகன்றிடுமே இராசராச சோழ னென்றே! (1)

சேரமன்னன் வில்லாக வளைந்த மீசை
.......சிறப்பழகைக் கொக்குகள்தாம் கண்டா லஞ்சி

வீரமன்னன் கட்டபொம்மன் உயிர்த்தா னென்றே
.......வெருண்டோடிப் பதுங்கிடுமே நடுக்கங் கொண்டு!

பாராண்ட நம்தமிழோ இவரைப் பார்த்தால்
........பிணைந்திட்ட மூவேந்தர் இவரே என்பாள்!

தேரோடும் வீதியெல்லாம் இவரைக் கண்டால்
.......தமிழ்ச்சங்கம் கண்டமன்ன ரென்றே வணங்கும்! (2)

கொல்லிமலைத் தென்றலது தவழ்ந்தே வந்து
.......கற்கண்டாம் இவர்சொல்லைக் கேட்டு விட்டால்

வல்வில்லான் ஓரிமன்னன் கூரிய அம்பும்
......வல்லவரின் சொல்வேகங் கண்டு நாணி

சொல்லாமல் ஓடிடுமே என்றே சொல்லும்!
.......சிவந்திட்ட தாமரைப்பூ இவரைப் பார்த்தால்

இல்லையே இவர்முகம்போல் தானு மென்று
.......இதழ்குவிய தலைகுனிந்து நீரைப் பார்க்கும்! (3)

ஆழ்கடலின் அலைகளெல்லாம் இவரைக் கண்டால்
......ஆரவார மில்லாத கடலாய் நோக்கும்!

ஆழ்கடலின் முத்தெல்லாம் சொல்லில் வைத்தார்
......ஆரிவர்க்கு இணையென்று வியந்தே போகும்!

ஏழிசையும் இவரன்பின் திறனைக் கண்டு
.......ஏழுலகை இனிப்பூட்டும் வேந்த னென்றே

வாழ்த்திடுமே பூத்திட்டப் பூக்க ளெல்லாம்
.......வாஞ்சையுடன் இவர்சிந்தும் புன்னகை உண்ணும்! (4)

கேட்போரின் செவியெல்லாம் தேனோ சொல்லோ
......கேட்டதெல்லாம் என்றேதான் வியந்தே போகும்!

நாட்டுடைமை யாக்கவேண்டும் இவரின் சொல்லை
......என்றேதான் இசைத்தமிழும் முழக்கம் போடும்!

காட்சிக்கு எப்போதும் எளியர் மேலும்
......கனிவோடு பழகுதற்கும் இனியர் என்றே

மாட்சிமைக் கொண்டேதான் எவருஞ் சொல்வார்
....மாத்தமிழர் இவர்புலமை தன்னைப் போற்றி! (5)

# நீ... உன்னை... உணர்!

**இருளில் பிறந்த அந்த 'ஒளியின் குழந்தை' தான் பிற்காலத்தில், நாம் அன்றாடம் பயன்படுத்தும் அனைத்து மின் சாதனங்களுக்கும் அவசியமான மாறுதிசை மின்னோட்டத்தை (Alternate current) கண்டுபிடித்து இந்த உலகிற்குத் தந்தது.**

**இந்த மாறுதிசை மின்னோட்டத்தால் (Accurrent) நமக்கு என்னப் பயன் என்று உங்கள் மன ஓட்டத்தில் பல கேள்விகள் எழலாம்? அதை அறிந்து கொள்ள வாருங்கள்! தொடர்ந்து பயணிப்போம்.**

மாறுதிசை மின்னோட்டம் எனும் கோட்பாடு இல்லையெனில். நவீன உலகத்தின் இன்றைய அபரீதமான தொழில்நுட்ப வளர்ச்சயை நம்மால் யோசித்துக் கூட பார்க்க இயலாது.

ஒரு குறிப்பிட்ட நொடிக்குள் வானில் வந்து மறையக் கூடிய மின்னலானது உருவாக்கும் அபரிதமான ஒளியின் தாக்கம் எத்தகைய ஆபத்தானது என்பது நாம் அனைவரும் அறிந்ததே!

கண்ணுக்குப் புலப்படாத, ஆனால் தொட்டால் மிகுந்த ஆபத்தை விளைவிக்கக்கூடிய அபரிமிதமான வலிமையுடைய மின்சக்தியை, ஒரு பாகன் யானையை அடக்கி தன் கட்டுக்குள் கொண்டு வருவதைப் போல அதன் நுட்பம் அறிந்து மாறுதிசை மின்னோட்டமாக மாற்றி மனிதர்களாகிய நமது கட்டுக்குள் கொண்டுவந்து பயன்படுத்தும் அந்த வித்தையைக் கண்டுபிடித்தது எப்படி?


இன்று, தொழிற்சாலைகள், வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்கள் என அனைத்து விதமான மின் இயக்கங்களுக்கும் மூலக்காரணம். இந்த குழந்தைக் கண்டுபிடித்த மாறுதிசை மின்னோட்டம் தான் எனும் பதில் நமக்கு வியப்பைத் தருகிறது அல்லவா?

வாழ்க்கையில் நாம் பயன்படுத்தும் 80 சதவீதமான மின்சாதன பொருட்கள் இந்த குழந்தையால் தான் கண்டுபிடிக்கப்பட்டது. பல்வேறு அறிவியல் கண்டுபிடிப்புகளை கண்டறிந்த தாமஸ் ஆல்வா எடிசனே மாறுதிசை மின்சாரம் என்பது சாத்தியமில்லாத ஒன்று என கை விட்டபோது அதை சாதித்துக் காட்டியது இந்த ஒளியின் குழந்தை தான்!

எதிர்கால தீர்க்கதரிசி **(Furturist)** என்ற



நெல்லை க. சோமசுந்தரி



இந்தக் குழந்தை கண்டுபிடித்த மாறுதிசை மின் னோட்டம் தான் எனும் பதில் நமக்கு வியப்பைத் தருகிறது அல்லவா?



வார்த்தையின் அர்த்தத்திற்குப் பொருத்தமான அறிவியல் மேதை தான். அந்த ஒளியின் குழந்தை 'நிக்கோலா டெஸ்லா'!

நுண்ணறிவு விகிதம் அதிகம் பெற்ற அனைவராலும் அறியப்பட்ட அறிவியல் விஞ்ஞானி ஐன்ஸ்டீன் அவர்களே தன் பேட்டியில், மிகச்சிறந்த அறிவியல் மேதை (Genius) என்றால் உங்களை தவிர்த்துக் யாரைக் குறிப்பிடுவீர்கள் என்று கேட்ட போது, எவ்வித தயக்கமுமின்றி "டெஸ்லா எனும் மகத்தான அறிவுஜீவியே அறிவியல் மேதை" என்று பதில் கூறினார்.

'டெஸ்லா' தான் ஒளியின் குழந்தை என்று கேள்விப்பட்டவுடன் எல்லோருக்கும் ஒரே வியப்பாக இருக்கும். நாம் கேள்விப்படாத, அறிவியல் மேதைகளின் வரிசையில் இடம் பெறாத பெயராக உள்ளது என மனதில் தோன்றலாம்.

ஆம்! அந்த அளவிற்கு உலகத்தால் 'மறக்கடிக்கப்பட்ட' அறிவியல் மேதையின் கண்டு பிடிப்புகளைப் பார்த்தோமானால் நமக்கு ஆச்சரியமாக இருக்கும்.

நாம் அன்றாடம் நம் வீடுகளில் பயன்படுத்தக்கூடிய மூன்று கட்ட மின்சாரம் **(3phase electric power)** நியான் விளக்கு, மிக்ஸி கிரைண்டர் என தொடங்கி அனைத்து விதமான மின் சாதனங்களுக்கும் அடிப்படையான 'டெஸ்லா' சுருள் **(Tesla Coil)** மோட்டார்ஸ் இயக்கங்கள் என இவர் உருவாக்கிய மின்பொருட்களின் பட்டியலின் நீளம் அதிகம் ஆகும்.

உலகில், பெரும்பகுதியை மின்சக்தியுடன் இணைக்க பயன்படும் மாறுதிசை மின்னோட்டம் எனும் ஒன்று இல்லையெனில், நவீன தொழில்நுட்பமோ, வயர்லெஸ் இணைப்போ, வலைத்தள பயன்பாடோ இன்று சாத்தியமே இல்லாமல் போயிருக்கும்.

மின்னியலில் பெரும் புரட்சியாய் இவர் கண்டுபிடித்த முக்கியமான கண்டுபிடிப்புகளில் நயாகரா நீர்வீழ்ச்சியில் முதன்முறையாக, வெற்றிகரமாக நீரின் மூலம் ஒரு நீர் மின் உற்பத்தி நிலையத்தை உருவாக்கி அமெரிக்காவில் குறிப்பிட்ட பகுதிகளுக்கு மின்சாரத்தைத் தந்தது.

**"மார்க்கோனி வானொலி கண்டு பிடிப்பதற்கு 30 வருடங்களுக்கு முன்னரே இவர் கண்டறிந்து விட்டார்."**

மின்னணு சாதனங்களின் மூலமான அங்கமான 'டிரான்ஸிஸ்டர்' அடிப்படை மாதிரி, இண்டக்சன் மோட்டார்' எக்ஸ்ரே இயந்திரத்தின் அடிப்படை மாதிரி, ராடார் கருவி தயாரிப்பு என இப்படி பல சோதனைகளை வெற்றிகரமாக செய்து காட்டியவர்.

மார்க்கோனி வானொலி கண்டு பிடிப்பதற்கு 30 வருடங்களுக்கு முன்னரே இவர் கண்டறிந்து விட்டார். அமெரிக்கா ஃபெடரல் நீதிமன்றத்தின் மூலம் வானொலியின் முதன்மை உரிமம் டெஸ்லாவிற்கு அளிக்கப் பட்டாலும் நோபல் பரிசு வாங்கியதன் விளைவாக மார்க்கோனிக்கே இந்த பெருமையை சென்றடைந்து விட்டது.

நவீன தலைமுறை கண்டுபிடிப்புகளில் டெஸ்லாவின் கருத்தியலை தவிர்த்துத் ஒரு கண்டுபிடிப்பு வருவது கடினம் தான் அத்தகைய சிறப்புமிக்க பல கண்டுபிடிப்புகளைக் கண்டு பிடித்தவர் தன்னுடைய கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை பெற்று பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில் அவர் செயல்படாததால் மறைக்கப்பட்ட வரலாறாய் இவருடைய பக்கம் சரித்திரத்தில் எழுதப்படாமல் போனதற்குக் காரணமாகிவிட்டது.

காப்புரிமை (Patent right) வைத்திப்பவர்களை தான் இந்த உலகம் சிறந்த கண்டுபிடிப்பாளர்கள் என நம்புவதால் தான் இவரைப் போன்ற அறிவியல் மேதைகளை உலகம் மறந்து விடுகிறது. தற்போது அறிவியல் பாடங்களில் காந்தப்புல



அடர்த்தியான அடிப்படை அலகாகக் டெஸ்லா என்னும் பெயர் பயன்படுத்துவதைத் தவிர வேறு எங்கும் இவரின் பக்கங்கள் அழுத்தமாகப் பதிவு செய்யப்படவில்லை என்பது மிகப்பெரிய வருத்தத்திற்குரிய செய்தியாக உள்ளது.

இன்று அனைவராலும் கொண்டாடப்படும் தொழிலதிபர் 'எலான் மஸ்க்' என்பவர் தன்னுடைய நிறுவனத்திற்கு 'டெஸ்லா' என்ற பெயரை வைத்து பெருமைப்படுத்தி இருப்பதால் ஏதோ இன்றுவரை டெஸ்லா பெயரை மட்டுமாவது நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

இவரின் மகத்தான ஒவ்வொரு கண்டுபிடிப்பு களுக்கான இந்த சிந்தனை தூண்டல் வெளியில் நம் கண்களால் காணக்கூடிய எந்த ஒரு பருப்பொருள்களில் இருந்தும் அவருக்குத் தோன்றவில்லை. ஒவ்வொரு கண்டுபிடிப்பும் அவர் அதனைப் பற்றிய உள்நோக்கி சிந்திக்க ஆரம்பித்ததன் காரணமாகத் திகழ்கிறது.

அவரின் கண்டுபிடிப்புகளை உற்றுநோக்கினால் அதன் அடித்தள கோட்பாடானது கண்ணுக்குப் புலப்படாத நுட்பமான அதிக வலிமையுடைய ஆபத்தை விளைவிக்கக்கூடிய ஒளியியல் ஆராய்ச்சிகள் மிக முக்கியமாக கருதப்படுவது அவரின் உள் நோக்கிய அகச் சிந்தனையாகும்.

எந்த ஒரு கண்டுபிடிப்பையும் தன் மனிதில் படமாக (Visual) உருவாக்கி முப்பரிமாண (3டி) கட்டமைப்பில் தன்னுடைய எண்ண அலைகளைக் குவித்து, தன் கண்டுபிடிப்புகளை உருவாக்கினார் எனும் இந்த செய்தி மனிதன் அகம் சார்ந்த உணர்வுகளை உணர்ந்து கொள்ள உதவும் ஒரு வழிகாட்டியாக நமக்கு உள்ள தல்லவா?

நாம் முன்பே கூறியது போல், ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இந்த நுட்பமான அறிவானது அளப்பரிய அளவில் அகத்தில் நிறைந்தே காணப்படுகிறது.

யார் ஒருவர் அகத்தை நோக்கி சிந்திக் கிறார்களோ? அவர்களாலேயே எத்தகைய கண்டுபிடிப்புகளையும் புறவுலகில் நிகழ்த்த முடிகிறது. அறிவியலின் ஒவ்வொரு நுட்பமான கோட்பாடுகளும், கண்டுபிடிப்பும் அகச்சிந்தனை மூலம் வெளிக் கொண்டு வரப்படுகிறது.அந்த கோட்பாடுகளே இன்றைய நவீன தொழில்நுட்ப அறிவியலின் அடித்தளமாகவும் அமைகிறது என்பதை கூறுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு மட்டும்தான் இந்த 'அகச் சிந்தனை' பயன்படுமா? இதில் சாதாரண மனிதனுக்கோ, பாமரனுக்கோ என்ன பலன் தரப் போகிறது என்று வினாக்கள் நம்மிடையே விடைத் தெரியாமல் நிற்கின்ற தல்லவா? இதற்கு விடை தேடி தொடர்ந்து எங்களுடன் பயணியுங்கள்! ஆச்சரியங்கள் பல காத்து நிற்கின்றன.

சிறுவயதிலேயே, சுறுசுறுப்பாய், சுட்டித்தனத் துடன் எதற்கும் அஞ்சாமல்! எவர் கேட்கும் கேள்விகளுக்கும் சிந்தித்து பதில் கூறும் ஒரு சிறுவன், பின்னாளில் இளைஞனாய் வளர்ந்து, அவன் உதிர்த்த "ஒற்றை வாக்கியம்" ஒட்டு மொத்த உலகத்தையும் திரும்பி பார்ப்பதற்கு அடித்தளமாய் அமைந்தது!

அப்படிப்பட்ட, அந்த வாக்கியத்திற்கு சொந்தமானவரை யார்? என்று அடுத்த இதழில் பார்ப்போம் !

**(உணர்வுகள் தொடரும்)**









# உலகத் தரத்தில் கீழடி அகழ்வைப்பகம்...


# எடப்பாடியார் சாதனைகளில் சிகரம்... !

"சொல்லின் செல்வர்"
ஆவடிக்குமார்

உலகின் முதல் குடி, மூத்த குடி, ஆதி குடி, தொன்மைக் குடி, என்றெல்லாம் நிலைத்த சிறப்பு பெற்றிருக்கின்ற, உயரிய பண்பாட்டுச் செழுமைக் கொண்ட தமிழ்க்குடியை...

'வையகம் போர்த்த வயக்கொலிநீர் – கையகலக்
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முன்தோன்றி மூத்தக்குடி'

என்று புறப்பொருள் வெண்பாமாலையில் ஐயநாரிதனார் குறிப்பிடுகிறார்.



உலகில் தோன்றிய மக்கள் தொகுப்புகளின் வாழ்க்கை முறைகள், வாழ்வியல்நெறிகளாகப்பின்பற்றப்பட்டு, கலை, இலக்கியம், ஓவியமாக நிலை நிறுத்தப்பட்டு, பண்பாடாக, நாகரிகமாக கடைபிடிக்கப்பட்டு, மொழியாக செழித்து வளர்ந்திருக்கின்றன. எத்தனையோ நாகரிகங்கள் தோன்றி வளர்ந்தும், சில மறைந்தும், சில சிதைந்தும், சில இருந்தும் வருகின்றன. அவற்றில், குறிப்பிடத்தக்க சிறந்த நாகரிகங்கள் என்று ஆராய்ச்சி வல்லுநர்கள் ஆய்ந்து அறிந்து, தெரிந்து சொன்னவற்றில் குறிப்பிடத்தக்கவை, தமிழர் நாகரிகம், ஆரியர் நாகரிகம், சுமேரியர் நாகரிகம், அரேபியர் நாகரிகம், எபிரேனியர் நாகரிகம், எழுபதியர் நாகரிகம், கிரேக்கர் நாகரிகம், ரோமானியர் நாகரிகம் என்பதாகும்.

இத்தனை நாகரிகங்கள் செழித்திருந்தும், உலகில் தோன்றிய காலம் தொட்டு, இன்று வரை இளமைக் குன்றாமல் வழக்கில் வாழ்ந்து வரும் நாகரிகம், மொழி, பண்பாட்டைக் கொண்டவர்கள் மூத்தக் குடிகளாகிய தமிழர்கள் மட்டுமே.

“இன்று வரை இளமைக் குன்றாமல் வழக்கில் வாழ்ந்து வரும் நாகரிகம், மொழி, பண்பாட்டைக் கொண்டவர்கள் மூத்தக் குடிகளாகிய தமிழர்கள் மட்டுமே.”

உலகின் தொன்மை குடி தமிழ்க்குடி என்பதை உணர்த்தும் கல்வெட்டுக்கள், ஓலைச்சுவடிகள், தடயங்கள், எழுத்துக்கள் சில, பல கண்டறியப்பட்டாலும் உரிய ஆவணமாக, ஆய்வறிஞர்களின் சான்றாதாரமாக்கத் தேவையான தரவுகள் கிடைக்காத தேக்க நிலை இருந்து வந்தது.

இந்நிலையை போக்கி, தமிழ்க்குடிகளின் தொன்மையான... தொல்லியல் உண்மையை... உலகத் தரத்தில் காட்சிப்படுத்தும் உயரிய... நவீன தொழில்நுட்பத்தில் மதுரையை அடுத்த கீழடி பரப்பில், கொந்தகை கிராமத்தில், நவீன அகழ்வைப்பகம் உருவாக்கும் உன்னத பணியை, ஆர்ப்பாட்டமில்லாமல் நிறைவேற்றி, ஆதித்தமிழ்க் குடிகளின் நாகரிக சிறப்பை, பண்பாட்டு வளர்ச்சியை, எழுத்தறிவை, உலகத்தின் பார்வைக்குக் கொண்டு நிறுத்தும் சரித்திரச் சாதனையை செய்திருக்கும், தமிழ்நாடு முதலமைச்சர், எடப்பாடி கே. பழனிசாமி அவர்களைப் போற்றிப் புளகாங்கிதம் அடைந்துள்ள உலகத் தமிழ் மக்களோடு இணைந்து, அனைத்திந்திய தமிழ்ச்சங்கம் வரவேற்று,



பாராட்டி, நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

உலகத்தின் பார்வையை தமிழ்நாட்டின் பக்கம் திருப்பி இருக்கும் கீழடி அகழ்வாய்வுகள் மூலம் வெளிப்பட்டிருக்கும் 2,600 ஆண்டுகள் பழமையான தமிழ்க்குடிகளின் நகர, நாகரிக தொல்பொருட்கள் பார்வைக்கு வைக்க 0.81 எக்டேர் நிலப்பரப்பில் ரூ.12.21 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசு, பொதுப்பணித்துறையின் புராதன கட்டிடங்கள் பாதுகாப்பு பிரிவு மூலமாக, அகழ்வைப்பகம் அமைக்கும் பணியை முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி கடந்த ஜூலை 20 ம் நாள் அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்துள்ளார்.

முதலமைச்சரின் இந்த முன்னெடுப்பின் வழியாக உலகத் தமிழ் மக்களின் பூர்வீகம் உணரப்பட்டதுடன், உலகம் முழுவதிலும் உள்ள தொல்லியல் வல்லுநர்கள், ஆய்வறிஞர்கள், வரலாற்று ஆராச்சியாளர்கள், ஆய்வு மாணவர்கள் நேரில் பார்வையிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த தலைமுறை தொடங்கி வைத்த இந்த ஆய்வுப்பணி, இனி வரக்கூடிய தலைமுறைகளுக்கும் கொண்டு செல்லும் வகையில் தொடர் ஆய்வுக்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் கீழடி கிராமப் படுகையில் இந்திய அரசின் தொல்லியல் துறை 2014 - 17 ஆகிய 3 ஆண்டுகள் அகழ்வாராய்ச்சி மேற்கொண்டது. மூன்று கட்டங்களாக நடைபெற்ற போது கிடைத்த சான்றுகளின் அடிப்படையில் 110 ஏக்கர் பரப்பளவில் "தொல்லியல் மேடு" அமைக்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த புரட்சித்தலைவி அம்மா அவர்கள் "தமிழ்நாடு தொல்லியல் துறை" கீழடியில் 4 ஆம் கட்ட அகழ்வாய்வை மேற்கொள்ள இந்திய தொல்லியல் துறையின் அனுமதி பெற்று, அடுத்தக் கட்ட ஆய்வுக்கு அடித்தளம் அமைத்தார்.

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வகுத்துக் கொடுத்த பயணப் பாதையின் தடம் மாறாமல், தடுமாறாமல் பயணம் செய்யும் தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தொடர்ந்து உரிய நிதி ஒதுக்கீடு செய்து சிறப்பாக செயல்படுத்தியதன் விளைவாக நான்காம் கட்ட அகழ்வாய்வில் 5,820 அரிய பொருட்களும், சங்க காலம் சார்ந்த செங்கல் கட்டுமான பகுதிகளும் வெளிப்படுத்தப்பட்டன.

தொடர்ந்து இந்திய தொல்லியல் ஆலோசனைக் குழுவின் அனுமதி பெற்று தமிழ்நாடு தொல்லியல் துறை மேற்கொண்ட ஐந்தாம் கட்ட அகழ்வாய்வில், பல்வேறு வடிவிலான செங்கல் கட்டுமானங்கள் வெளிக் கொணரப்பட்டன. சுமார் 900 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அகழ்வாய்வு பணிகளின் அடுத்தகட்டக் கட்டமாக 2019 - 20 ஆம் ஆண்டில் இந்திய தொல்லியல் ஆலோசனைக் குழுவின் அனுமதியைப் பெற்று கீழடி மற்றும் அதனை சுற்றியுள்ள மணலூர், கொந்தகை மற்றும் அகரம் ஆகிய இடங்களில் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை, 6 வது கட்ட ஆய்வு பணிகளை முதலமைச்சர் எடப்பாடி கே. பழனி சாமி கடந்த பிப்ரவரி மாதம் 19ஆம் தேதி தொடங்கிவைத்தார். தொடர்ந்து அகழ்வாய்வு பணிகள் நடைபெற்று வருகிறது.

கீழடி படுகையில் இன்னும் பல கட்ட அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையில், இதுவரை நடைபெற்ற அகழ்வாய்வின் அறிவியல் முறையான காலக்கணிப்புகளின் படி, தமிழ்நாட்டில் ஏறத்தாழ 15 லட்சம் ஆண்டுகளாக மக்கள் வாழ்ந்து வருகின்றனர்

என்பதை உணர்த்துகிறது. தற்போது கீழடி ஆய்வுகள் கி.மு. ஆறாம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் மக்கள் எழுத்தறிவு பெற்றிருந்தனர் என்று தெரிவிக்கிறது, மேலும் இந்தியாவின் கங்கை சமவெளி பகுதியில் கி.மு. ஆறாம் நூற்றாண்டளவில் தோன்றிய, இரண்டாம் நகர மயமாக்கம் தமிழகத்தில் காணப்படவில்லை என்ற கருதுகோள் இதுவரை அறிஞர்களிடையே நிலவி வந்ததை மாற்றும் வகையில் கி.மு. 6 ம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் நகரமயமாக்கம் உருவாகிவிட்டது என்பதை கீழடி அகழ்வாய்வு உலகுக்கு உணர்த்துகிறது.

2013 14 ம் ஆண்டு முதல் ஆறு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் விரிவான



தொல்லியல் ஆய்வுகளின் மூலம், கீழடியில் இருந்து சுடுமண் உருவங்கள், மணிகள், செப்புக்காசுகள், இரும்பு பொருட்கள், வட்ட சில்லுகள், ஆட்டக்காய்கள், எலும்பு முனைகள், சுடுமண் காதணிகள், சங்கு வளையல்கள், தங்கத்திலான பொருட்கள், தமிழி எழுத்துப் பொறிப்பு கொண்ட பானை ஓடுகள், குறியீடுகள் போன்ற ஏறத்தாழ 14,535 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கீழடியில் இந்தியத் தொல்லியல் துறை 3 கட்ட ஆய்வுகள் செய்து முடித்த நிலையில், எந்தவித விளக்கமும் இல்லாமல், ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வு போல அமிழ்ந்து விடுமோ என்று தமிழறிஞர்களும், பொது மக்களும் பயந்து கொண்டிருந்த நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அரசு, தன் கையிலெடுத்து, இந்திய தொல்லியல் துறை அனுமதியைப் பெற்று, தமிழ்நாடு அரசின் நிதியி லிருந்து நிதி ஒதுக்கீடு செய்து, தமிழ்நாடு தொல்லியல் துறை மூலம் அகழாய்வுப் பணிகளை மேற்கொண்ட தொலைநோக்கு நடவடிக்கை தான் இன்று தமிழ் மக்களின் சரித்திர ஆவணமாக மாறியிருக்கிறது.

கடந்த 2017 ஆம் ஆண்டு தொடங்கிய 4 வதுகட்ட அகழ்வாய்வு பணிகள் மூன்று கட்டங்களாக முன்னேறி 6வது கட்டத்தை அடைந்திருக்கிறது. மூன்றாண்டுகளில் முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் முனைப்பான கண்காணிப்பு மற்றும் ஊக்கத்தின் காரணமாக வேகமெடுத்த அகழ்வாய்வின் வழியாக சிந்து வெளி நாகரிகம் தமிழ்க்குடிகளின் நாகரிகம் என்ற எண்ணத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

> 6 –வது கட்ட ஆய்வு பணிகளை முதலமைச்சர் எடப்பாடி கே. பழனி சாமி கடந்த பிப்ரவரி மாதம் 19ஆம் தேதி தொடங்கிவைத்தார்.

தமிழ்க்குடிகளின் பண்பாட்டை, பாரம்பரிய நாகரிகத்தை, எழுத்தறிவு பெற்ற குடிமக்களாக ஏற்றம் பெற்றிருந்த பெருமிதத்தை, தமிழ் சமுதாயத்தின் நிலையை உலகம் என்றென்றும் உணரும் வகையில், நிலையாக, நிரந்தரமாக, ஆதித்தமிழ் மக்களின் தொன்மையைக் காட்சிப்படுத்திய முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி அவர்களைத் பாராட்டாத தமிழர்கள் இருக்க முடியாது.

தமிழ், தமிழ் என்று வாயால் பேசி, தமிழை வைத்து தன்னையும் தன் குடும்பத்தையும் வளப்படுத்திக் கொண்டு, மானாட... மயிலாட என்று நடிகைகளை ஆடவிட்டு அண்ணாந்து பார்த்து.. அடிக்கொரு பாராட்டு விழா நடத்தி பொழுது போக்கிய முதல் அமைச்சரை பார்த்த தமிழகம் எந்தவித பந்தாவும் இல்லாமல் எளிமையாக, இயல்பாக, செயல்களின் மூலமாக தன்னை உணர்த்தி உயர்ந்துக் கொண்டிருக்கும் முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை பார்த்து...

உலகத்தரத்தில் கீழடி அகழாய்வு வைப்பகம்...

எடப்பாடியார் சாதனையின் சிகரம்...!

என்று தமிழாய்ந்த தமிழர்கள்

கொண்டாடுகிறார்கள் ,.. கொள்கைச் சான்றோன் என்று மனதார வாழ்த்துகிறார்கள்..

**சாதி மதம் இல்லாத ஆதி காலந்தொட்டு பூமியில் தழைத்திட்ட மாந்தர் இனங்களில், தமிழர்களுக்கென்று தனியான கலாச்சாரமும், பண்பாடும், மரபும் மற்றும் பழக்க வழக் கங்களும் உண்டு என்பதில் எள்ளளவும் மாற்றமில்லை. அதிலும் குறிப்பாக, தமிழ் வருடத்திலுள்ள பன்னிரண்டு மாதங்களில் நான்காவது மாதமாக வரும் ஆடி மாதம் தமிழர்களின் வாழ்க்கையில் தெய்வீகத்தன்மை வாய்ந்ததாக கருதப்படுகிறது. தன்னைத் தானே சுற்றிக் கொள்ளும் பூமியின் சுழற்சியையும், கோள்களின் நகர்வையும் வைத்து தமிழ் வருடத்தை இரண்டு அயனங்களாக ஆடி முதல் மார்கழி வரையிலான மாரிகாலம் தொடக்கம் முதல் இறுதி**

வரை தட்சிணாயனம் என்றும் தை முதல் ஆனி வரையிலான கோடைக் காலம் தொடக்கம் முதல் முடிவு வரையில் உத்ராயணம் என்றும் பிரித்திருக்கிறார்கள். (மார்கழி மாதம் தொடங்கிய மகாபாரத போரில் பீஷ்மர் அம்புப்படுக்கையில் தனது மரணம் உத்ராயண புண்யகாலத்தில் நிகழவேண்டும் என காத்திருந்ததை நாம் படித்திருக்கிறோம்).

## ஆடிப் பட்டம் தேடி விதை

பொதுவாக தமிழ்நாட்டில் தென்மேற்கு பருவக்காற்றின் மூலம் மழை ஆனி மாதம் தொடங்கி ஆடியில் அதிகப்பட்சமாக மழைப் பொழிவு இருக்கும். அதைத் தொடர்ந்து தென் தமிழ் நாட்டில் பரவலாக எல்லா ஆறுகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்படும். குறிப்பாக காவிரி கரைகளில் ஆடிப் பெருக்கு என ஆடி 18 ஆம் நாள் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்படும். ஆடிப் பதினெட்டில் பழங்கால ஓலைச்சுவடிகளை ஆற்றில் விடக்கூடிய வழக்கம் இருந்திருக்கிறது காரணம், நெல், கரும்பு, வாழை, மஞ்சள் போன்றவற்றைப் பயிரிட்டு விவசாயம் செய்வதே நமது முக்கிய தொழிலாக இருந்து இருக்கிறது. கிட்டத்தட்ட 180 நெல் வகைகள் உணவுப் பயன்பாட்டிற்காக தமிழ்நாட்டில் மட்டுமே பயிரிட்டு வந்திருக்கின்றனர். ஆடிப்பட்டம் தேடி விதை என்ற சொலவடைக்கேற்ப விதைத்த நெல்மணிகள் முற்றி அறுவடை செய்து வீடு வந்து நிறைந்திட, தேவையான நீர்வளத்திற்கு காத் திருக்கும் வேளாண்மை குடிமக்களுக்கு, கரைப் புரள ஓடி வரும் ஆறுகள் கண் கண்ட தெய்வமாக தெரிவதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

## ஆடி மாதமும் ஆன்மீக மரபும்

ஆடி மாதம் முதல் நாள், ஆடிப் பண்டிகையாக கொண்டாடப்பட்டாலும், பொதுவாக ஆடியில் எந்தவொரு சுப காரியங்களையும் இல்லங்களில் செய்யக்கூடாது என்ற (ஒரு சில இனத்தினரை தவிர்த்து), நிலைக்குக் காரணம் குடும்பத்திலுள்ள ஆண், பெண் என அனைவரும் பொழுது விடியும்

பெங்களூர் ர. தேன்மொழி



# ஆடி மாதத்தின்
# தமிழர் மரபு

போதே இறங்கி வேலைப் பார்த்து மழை தொடங்கக் கூடிய பருவக் காலத்தில் பருவத்தே பயிர் செய்ய தயாராக இருக்க வேண்டும் என்பதற்காக இருந்திருக்கலாம்.

ஆடி அமாவாசை அன்று நமக்கு வாழ்க்கையும், இயற்கை சார்ந்த வாழ்வியலையும் தந்து சென்ற நம் முன்னோர்களுக்கு முதலில் நன்றி செலுத்தும் வண்ணம் என பல உணவு வகைகளுடன் வாழையிலையில் படையலிட்டு வணங்கும் முறை வழக்கத்தில் உள்ளது,

நம் நாட்டில் முப்பத்து முக்கோடி தேவர்கள் இருப்பதாக நம்பப் பட்டாலும், தமிழ்க் கடவுளாக கருதப்படும் முருகக் கடவுளுக்கு முதல் மரியாதை கொடுக்கும் வகையில் ஆடிக் கிருத்திகை , " விரதம் இருப்பது", "காவடி எடுப்பது" என வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

திருப்பாவை, நாச்சியார் திருமொழியென வைணவ இலக்கியங்களைப் படைத்த 12 ஆழ்வார்களில் ஒருவராகப் போற்றப்படும் சூடிக் கொடுத்த சுடர்கொடி என அழைக்கப்படும் கோதை நாச்சியார் எனப் போற்றப்படும் ஆண்டாள் அவதரித்த ஆடிப்பூரம் அனைத்து வைணவத் திருத்தலங்களிலும் விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

"ஆடிப்பூரம்" மற்றும் "ஆடி தபசு" ஐயை (அம்மன்) வடிவாக தென் மாவட்டங்களில், சைவ திருத்தலங்களிலும் திருவிழாக்கோலமாக பல காலந்தொட்டு வழிபட்டு வருகிறார்கள்.

ஆடி மாதம் முழுவதும் அம்மனுக்கு சிறந்ததாக இருந்தாலும், ஒவ்வொரு வாரமும் வருகின்ற ஞாயிறு, செவ்வாய், மற்றும் வெள்ளிக் கிழமைகள் மிகவும் விசேடமாக கூழ் ஊற்றுதல் மற்றும் தீ மிதித்தல் என வழிபடும் மரபும், கிராமங்கள் முதல் நகரங்கள் வரையிலும் அனுசரிக்கப் படுகிறது. அதையொட்டி இயல் இசை நாடகம் என முத்தமிழ்க் கலைஞர்களும் பங்கேற்கும் வகையில் பல பல்சுவை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. கோடைக்காலம் முடிந்து மழைக்காலம் தொடங்கும்போது நோய்த் தொற்றுகள் பரவாமல் இருக்க கிருமிநாசினி யாக விளங்கக்கூடிய வேப்பிலை, மஞ்சள் போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதற்கும் இந்த மரபு ஏற்படுத்தப்பட்டு இருக்கலாம்.

## புதுமண தம்பதியருக்கு ஆடி மாதம்

பொதுவாக புதுமண தம்பதியர் ஆடி மாதத்தில் சேர்ந்து இருத்தல் ஆகாது என தாய் வீட்டிற்கு பெண்ணைப் பிரித்து அழைத்துச் செல்லும் மரபு இருந்தது. சித்திரை மாதத்தில் முதல் குழந்தை ஆணாக பிறந்தால் குடும்பத்திற்கு ஆகாது என சொல்லப்பட்டது. இது ஒரு மூட நம்பிக்கையாக நாம் இன்று பார்த்தாலும், நம் முன்னோர்கள் அந்தக் காலக் கட்டத்திற்கேற்றவாறு சொல்லி இருப்பதை உணரலாம். ஏனெனில், முதல் குழந்தை பிறக்கும் போது சற்றே கடினமான நேரமாக பெண்களுக்கு இருக்கும். அதுவும், சித்திரை மாதத்தில் மின்சார வசதியில்லாத கோடை காலத்தில் அழலிப் போன்ற வெப்பம் தாங்க முடியாமல் பச்சிளங்குழந்தை உடல்நலத்திற்கு ஊறு விளைவிக்கலாம். குறிப்பாக, அம்மைப் போன்ற பல தொற்று நோய்கள் ஏற்பட்டு.. நோய்த் தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்படாத காலத்தில் குழந்தைப் பிறப்பு என்பது, தாயிக்கும் சேயிக்கும் உகந்ததாக இருக்காது என்பதால், சித்திரையில் தலைச்சன் பிள்ளை பிறந்தால் தகப்பனுக்கு ஆகாது என குடும்பத் தலைவரை முன்னிறுத்தி சொன்னால் தான் கடைப்பிடிப்பார்கள் என உளவியல் காரணத்தால் சொல்லப்பட்டிருக்கலாம். ஆனால், இன்று மின்சார வசதி மூலம்.. மின் காற்றாடிகளும், குளிர் சாதன அறைகளும் அனைத்து வீடுகளிலும் வந்துவிட்டது. மக்களிடையேயும் அந்த மரபு மெல்ல குறைந்து புதுமணத் தம்பதியர் பிரிவு என்னும் முறை மெல்ல மாறி வருகிறது.

> தமிழ்க் கடவுளாகக் கருதப்படும் முருகக் கடவுளுக்கு முதல் மரியாதை கொடுக்கும் வகையில் ஆடிக் கிருத்திகை கொண்டாடப்படுகிறது.

## இருபத்தியோராம் நூற்றாண்டில் ஆடி

தற்போதைய காலத்தில் ஆடி மாத மரபாக ஆடித் தள்ளுபடியும் சேர்ந்துவிட்டது என்ற உண்மையை ஒப்புக்கொண்டுத் தான் ஆக வேண்டும். தமிழகத்தின் நடைப்பாதை கடைகள் முதல் அடுக்கு மாடி கடைகள் வரை அனைவருக்கும் தேவையான உடைகளிலிருந்து வீட்டு உபயோகத்திற்குப் பயன்படும் அனைத் துப் பொருட்களும் விற்பனைக்கு மலிவான விலையில் கிடைப்பதாக நம்பி நமது மக்களும் ஆடித் தள்ளுபடியையும் நமது மரபாக ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்றால் மிகையாகாது.

கோவில்பட்டி செ.முருக சரஸ்வதி

# நல்ல எண்ணங்கள்



மனிதன் மனிதனாக வாழ்வதற்கும்,மனித வாழ்வை, சீர்படுத்தி, மேம்படுத்துவதற்கும், நம் முன்னோர்கள் அரும்பெரும் நீதிக் கருத்துகளையும், வழி முறைகளையும் அதிகம் நமக்கு அளித்துள்ளனர்,,, அவை, வாய்மொழி யாகவும், எழுத்து மொழியாகவும், இன்றும் நிலை பெற்று இருப்பதைக் காணமுடிகின்றது,, இவ்வாறு சீர்திருத்த கருத்துக்கள் அடங்கிய பொன்மொழிகளுள், விவேகானந்தர் கூறியது,,, '' நீ எதுவாக மாற நினைக்கிறாயோ, அதுவாகவே மாறுவாய்''– –என்பதாகும். இப்பொன்மொழிக்கு உதாரணமாக, கம்ப ராமாயணத்தில் வருகின்ற சிறு நிகழ்வை ஒப்பிட்டுக் காணலாம்,,

இராவணன்,சீதையைக் கடத்திச் சென்று, இலங்கையில் உள்ள அசோகவனத்தில், சிறை வைக்கிறான். சீதைக்குக் காவலாக, அரக்கர்குல பெண்களை அமர்த்துகிறான். அப்பெண்களில் இராவணனின் தம்பி விபீடணின் மகள் திரிசடை என்பவள், மென்மையான இன்சொல் உடையவள். அன்புடை உள்ளம் கொண்டவள். சீதைக்காக, அவள் நிலை கண்டு இரக்கம் கொண்டு தோழியாகிறாள். பலநேரங்களில் ஆறுதல் கூறி ஆற்றுப்படுத்துகிறாள்.

ஒரு நாள் சீதை இராமநாமம் கூறிக்கொண்டே, சத்தமாக அழுது கொண்டிருக்கிறாள் இதைக்கண்ட திரிசடை, கணவனின் நினைவு அதிகம் வாட்டுகிறதா? உன் அழுகைக்குக் காரணம் யாதோ? என, வினவியவளுக்கு, சீதை பதிலுரைத்தாள்.

அந்த மரத்தைப் பார், எங்கிருந்தோ ஒரு புழுவைக் கொணர்ந்த கருங்குழவி ஒன்று, தனது காயாத களிமண் கூட்டில் வைத்து, அதை அகலவிடாது, கொட்டிக்கொண்டே இருக்கின்றது. நொடிப்பொழுதும் இடைவிடாது அப்புழுவை அடித்தும், கொட்டியும் துன்புறுத்திக் கொண்டிருக்கிறது, அந்தப் புழுவின் துன்ப நிலையில்தான் நான் இருக்கிறேன் என்று, அழுகையுடனே உரைக்கின்றாள்.

அதற்கு திரிசடை, அந்தக் குழவி ஒன்றும் புழுவைத் துன்புறுத்தவில்லை. தன் இனத்தை விருத்தி செய்வதற்காகத்தான் அவ்வாறு செய்கிறது. தனக்குத் தொடர்பில்லாத புழுவை, தன்னை மட்டுமே நினைக்க வைத்து, அதன் எண்ணம் முழுவதும் தானே இருக்கும்படி செய்கிறது. இதனால் அந்தப் புழுவானது காலப் போக்கில் அந்தக் குழவியாகவே மாறி விடும். குழவியானது அதன் வேலையைத்தான் செய்கிறது.

அந்தப் புழு எப்படி குழவியை நினைத்து அதுவாகவே மாறிவிட்டதோ,அதேபோல் நீயும் சிந்தை மாறாமல் உன் கணவனுடன் மகிழ்ந்திருக்கும் தருணத்தையே நினைத்துக் கொண்டிரு, ,அதேபோல் நீயும் மாறிவிடுவாய். விரைவில் உன் கணவனைக் கூடுவாய், என்கிறாள்.

திரிசடை சீதைக்கு கூறியது போலவே, மனித எண்ணங்களின் மன ஓட்டமே வாழ்வை நிர்ணயிக்கும். நமது சிந்தனையில் அதிகம் எவ்வெண்ணம் வலம் வருகிறதோ,அதுவே நிசமாய் மாறும்.

நல்ல எண்ணங்களே,நல்ல மனிதர்களை உருவாக்கும்,
நல்ல எதிர்காலத்திற்கு
நல்ல எண்ணங்களே
நிறைந்திருக்கவேண்டும்
நல்லதையே நினைப்போம்
நல்ல நினைவுகளே நிசமாகும்.

# தென்காசி!

**கலை என்று சொல்லும் போதே மூவேந்தர்களின் கரங்களில் நடனம் புரிந்ததால் கலைமகள் எனலாம்.**

**நம் பண்டைய நாகரீகத்தின் படைப்புகளை இன்றும் சுவாசித்துக் கொண்டிருக்கிறோம்! ஓவியங்களில், சிற்பங்களில் வடகாசிக்கு நிகரான தெற்கே ஒரு காசி அது தான் தென்காசி விஸ்வநாதர் ஆலயம்! தென்காசிப் பாண்டியர்கள் என அழைக்கப்பட்ட மன்னர்கள், இக்கோவிலில் முடிசூட்டிக் கொண்டனராம்.**


**கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த விந்தன் கோட்டை வாழ் வேந்தனாம் பராக்கிரம பாண்டியன் தென்காசியில், அருள்மிகு உலகம்மை உடனுறை விசுவநாதர் ஆலயத்தைக் கட்டினான்.**

சில ஆண்டுகளில் கோபுரத்தில் ஏற்பட்ட தீயினால் மொட்டைக் கோபுரமானது பல ஆண்டுகளாய்! 500 ஆண்டுகளுக்குப் பின், இக்கோபுரத்திற்கு நல்லதொரு விடிவெள்ளி கிட்டியது.

கனவில் கண்ட மொட்டைக் கோபுரத்தை சீரமைக்க முன்வந்தார் சிவந்தி ஆதித்தனார் அவர்கள்.

பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவரின் இசைதலோடு, அறநிலையத்துறை அமைச்சர் இராம. வீரப்பன் அவர்களின் முயற்சியாலும் 28. 11. 1984 அன்று கோவில் திருப்பணி தொடங்கப் பெற்று, எம்.முத்தையா ஸ்தபதியின் முழு ஆற்றலுடன் நிறைவுபெற்று, 25. 06. 1990 அன்று குடமுழுக்குப் பெருவிழா சிறப்பாக நடந்தேறியது.

கோபுரம் 800 சிலைகளுடன் 178 அடி உயரத்தில் விண்ணை



முட்டும் அழகுடன் மிளிர்கிறது. கோலமுறு கோபுரமும், செவ்வண்ணத்தில் தகதகக்கும் மதிற்சுவரும் அற்புதமானவை.

தென்பொதிகை வளர் தென்றல், சந்தனக் காட்டுக்குள் நுழைந்து செண்பக மலர் மணம் வீசும் தென்காசி நகரில் ஒய்யாரமாய் நிற்கிறது.

விழாவை முன்னிட்டு வண்ணமிடும் சிலைகளை பளு தூக்கி(விஞ்ச்)யில் நானும், பேராசிரியர் மதிப்பிற்குரிய ச.கணபதி இராமன் ஐயாவும், ஒன்பது தளங்களிலும் சென்று ஒவ்வொன்றையும் அருகில் பார்த்துப் பரவசமடைந்தேன். சிற்பக் கலைஞர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டதை, உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்வடைகிறேன்.

குடமுழுக்கு மலரில் நான் எழுதியதிலிருந்து!

கோபுரத்தின் கிழக்கு பாகத்தில் சிவதாண்டவம், மேற்கில் திருமால், சிவன், வடக்கில் ஒன்பது மாடங்களுக்கும் ஒன்றாக 9 பிரம்மாக்களும், தெற்கில் முனிவர்களுடன் இருக்கும் தட்சிணா மூர்த்திகள் ஒன்பது மாடங்களிலும், எட்டு திசைகளிலும் அஷ்டதிக்குப் பாலகர்களும் ஒய்யாரமாக உள்ளனர். கிழக்கு முகத்தில் உள்ள ஜெயவிஜயா எனப்படும் துவாரபாலர்கள் மேற்கிலும் உள்ளனர்.

**கோபுரம் 800 சிலைகளுடன் 178 அடி உயரத்தில் விண்ணை முட்டும் அழகுடன் மிளிர்கிறது.**

கஜசம்ஹாரமூர்த்தி பிட்சாடனாரும் அழகாய் உள்ளனர். சிவனும், விஷ்ணுவும் சேர்ந்த, அர்த்த நாரீஸ்வரர், ஹரிஹரன், நடராசர், ஊர்த்துவர், உத்ரதாண்டவர் இவர்களுடன் என் கண்களில் ஒரு காட்சி தென்படுகிறது. சிவபெருமானிடம் கோபம் கொண்டு, அவர் தலையிலிருந்து இறங்கிப்போகும் கங்கையை ஒரு கையால், தன் அருகிருக்கும் பார்வதி தேவியரை அணைத்து கொண்டும் சமாதானப்பார்வை பார்க்கும் எம்பெருமானின் சங்கடமான நிலை!

சிற்பக் கலைஞர்களின் கலைநயத்தை என்னென்பது? அடுத்து மீனாட்சி திருக்கல்யாணக் காட்சி! தன் தங்கையை சொக்கருக்குத் தாரைவார்த்துக் கொடுக்கிறார். பெண்ணுக்குரிய நாணத்துடன் ஓரப்பார்வை பார்க்கும் மீனாட்சி அம்பாள். அதோ அங்கே பாருங்கள் தன் கண்ணைக்குத்தி சிவனுக்குப் பொருத்திடும் கண்ணப்பர், பஞ்சமுக கணபதி, நர்த்தன கணபதி வராக மூர்த்தி நரசிம்மர், இராமர் சீதாதேவி, இலட்சுமணன் அனுமானுடன் பொதிகைத் தலைவர் அகத்திய மாமுனி அனைவரையும் வாழ்த்துவது போன்ற காட்சி மெய்சிலிர்க்க வைக்கிறது. நாலு கோடியிலும் கோபுரத்தைத் தாங்கி நிற்கும் பூதகணங்கள் ஆண்கள் இவர்களோடு, நெற்றி விபூதி குங்குமத்துடன் லாவகமாக. இடுப்பை வளைத்து நின்று சாமரம் வீசும் பெண்கள், அனைவரையும் கவர்கிறார்கள்.

ஒன்பதாவது நிலைக்கு வருகிறேன். அதன் வெளிப்பகுதியில் பாதை அமைத்து, தென்காசியை குளிர்தரும் குற்றால அருவிகள் பரப்பியப் புல்வெளிகள்! சலசலக்கும் நீரோடைகள் அடுக்கிவைத்தக் கட்டிடங்கள், மாடவீதிகளில் திருமலைக் கோவில் இவை அனைத்தையும் பார்க்கும் படியான வசதிகளை செய்து வைத்திருக்கிறார்கள்!

மேல் நிலையில் சந்திர சூரியர்களும், அழகே உருவாக சிவன்மைந்தன் முருகனும் மலர்ந்த முகங்களுடன்!

இக்கோபுரம் கலைநயமிக்க, கலைக் களஞ்சியமாகத் திகழ்கிறது.

பராக்கிரம பாண்டியன் அன்று பழுதடைந்த இக்கோபுரத்தை, மீண்டும் எழுந்து நிற்க வைத்து, குடமுழுக்கு செய்கிறாரோ, அவர்கள் பாதம் பணிகின்றேன் இப்போதே எனப் பொருளுடன் கோபுரத்தின் கீழே நுழைவாயிலில் வலதுபக்கச் சுவற்றில் கவி வாசகமாகப் பொறித்து வைத்துள்ளான். அந்த மாவேந்தனின் பெருங்கனவு இன்று நனவாகி, ஓங்கி உயர்ந்து நிற்கின்றது. அற்புத கலைச் சித்திரமாக பாண்டியரின் பெருமை கூறுவதாக வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகவே ஒளிர்கின்றது.

குற்றாலம் போகும் வழியில், தென்காசியில், நடுநாயகமாகத் திகழும் உலகன்னை உடனுறை விசுவநாதரைக் கண்டு வணங்கிடுவீர் காசிக்கு செல்ல முடியாதோர், தென்காசி வாருங்கள் வணங்கி வளம் பெறுங்கள்!

தேன் தமிழின்
தீஞ்சுவையே!
தித்திக்கும் முக்கனியே!
வான்மழையாய்
பொங்கிவரும்
வண்டமிழே –
ஆண்டகையே!
தாய்மைத் தனிவடிவே!
தன்மானப் பேரொளியே!
வாய்மை நிறை
அண்ணாவாழி!

என்று அண்ணாவைப் போற்றுகிறார் 'சொல்லின் செல்வர்;' ஆவடிக்குமார். அனைவராலும் மிகவும் பிரபலமாக அண்ணா என அழைக்கப்பட்டவர். பேராறிஞர் அண்ணா அன்னைத் தமிழை நல்லிலக்கிய முத்துக்களால் அலங்கரித்து அழகு பார்த்த ஆன்றோர் பலர். அவர்கள் செய்தத் தமிழ்த் தொண்டு அவர்களையும், தமிழையும் வளர்த்தது. தமிழால் சிறப்புப் பெற்றவர் பலருண்டு. தமிழை சிறப்புறச் செய்த சீர்மாந்தர் சிலரும் உண்டு. அத்தகைய பெருந்தகைகளில் ஒருவராய் "தொண்டைநாடு சான்றோருடைத்து'' என போற்றப்படும் தொண்டை மண்டலத்தின் புண்ணிய பூமியாம் காஞ்சி மண்ணில் அவதரித்தவர் பேராறிஞர் அண்ணா. காஞ்சிபுரம் "நடராஜன்" அண்ணாதுரை என்பது இவர் இயற்பெயர்.

அண்ணா சமூக சீர்திருத்தவாதியாகவும், அரசியல் தலைவராகவும் இருந்து தமழ்நாடு முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டவர். "அண்ணா'' என்று சகோதர பாசத்தோடு மக்களால் அழைக்கப்பட்ட மாபெரும் தலைவர். அண்ணா அரசியல் வாழ்க்கையைத் தவிர நாடகங்களுக்கும் திரைப்படங்களுக்கும் திரைக்கதைகள் எழுதும் திறமை படைத்தவராக விளங்கினார். சிறந்த சொற்பொழிவாளர் மற்றும் மேடைப் பேச்சாளர் ஆவார்.

**"கடமை கண்ணியம் கட்டுப்பாடு"**

அறிஞர் அண்ணா அவர்களின் உயிர் கொள்கை முழக்கமாகவும் கட்சியின் பண்பாடாகவும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை கடைபிடிக்கச் சொன்னதை சொல்லின் செல்வர் ஆவடிக்குமார்,

**"கடமையோடுகண்ணியமும் கட்டுப்பாடும்**
**கறைபடியாவாழ்வுக்குகாவல் என்று**
**மடமைநிறைமாந்தரிடம் எடுத்துக் கூறி**

மானமுடன் வாழ்வதற்குபாதை காட்டியவர் அண்ணா என்றுரைக்கிறார் ஆவடிக்குமார்.

கடமை கண்ணியம் கட்டுப்பாடு இதில் கடமை என்பது தனிப்பட்ட அமைப்புக்குள் இருப்பவர் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படையான பண்பாடுகள். கண்ணியம் என்பது பொதுவாக மற்றவர்களுடனும் அதிலும் சமுதாயத்தில் அரசியலில் கலந்துகொள்ளும் அனைவருடனும் ஒருவருக்கொருவர் காட்டிடும் மதிப்பு, மரியாதை என்பவற்றைக் குறிப்பிடுகிறது.

**"உடமையற்ற நம்மையெல்லாம் ஒன்றுகூட்டி**
**உயர்நிலையைப் பெறுவதற்கு உரமாய் வாழ்ந்து**
**நடைமலைபோல் நம்மிடையே உலாவந்து**
**நற்றமிழில் உறைந்திட்ட கோயெம் அண்ணா! "**

> **திரைக்கதைகள் எழுதும் திறமை படைத்தவராக விளங்கினார்.**

என்று "சொல்லின் செல்வர்" தம் கவிதையில் குறிப்பிடுகிறார். தமிழுக்காக! தமிழினத்திற்காக! தமிழ்நாட்டிற்காக! மட்டுமே தன் சிந்தை, சொல், செயல் ஏன் தன் வாழ்நாள் முழுமையுமே தமிழின முன்னேற்றத்திற்காக அர்ப்பணித்தவர் அண்ணா அவர்கள். அந்நாளில் மனிதசமுதாயத்தை உலுக்கிக் கொண்டிருந்த அடிமைக் கொள்கைகளும், இனவெறிக் கோட்பாடுகளும், அதன் பொருட்டு ஏற்பட்ட வறுமையெனும் கொடியநோயும், சமூகத்தின்

கோவை. சீ.விஜயலட்சுமி



## ஆவடியார் பார்வையில்

# அண்ணா...

அடித்தட்டு மக்களை படாதபாடுபடுத்துவதைக் கண்டு உளம் நொந்தார் அண்ணா.

இலக்கியப் பங்களிப்புகள்:

குறிப்பாக தமிழ்ச் சமுதாயத்தை மேம்படுத்துவது அதற்கான வழிகளைக் கண்டறிந்து சமூக அவலங்களை எடுத்துரைப்பது, அதில் தனது ஆழ்ந்தகவலையையும், அக்கறையையும் வெளிக்காட்டுவது இச்சமூக அவலத்தைப் போக்க எல்லோரின் கவனங்களையும் ஈர்க்கவைப்பது எனும் நிலையில் சிந்தித்து அதனையே தனது படைப்புகளில் நிறுத்துவதா ஆவடிக்குமார் ஐயா அவர்கள் கூறுகிறார்.

**"கரையில்லாத் தமிழெடுத்து**
**கருத்துமழைப் பொழிந்து வங்கத்**
**திரைக்கரங்கள் வடித்துவைத்த**
**திருமணலின் மெத்தைதன்னில்**

என்று கூறியது, இலக்கியப் பணிக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். சொல்லின் செல்வர் அண்ணாவைப் பற்றிப் பாடிய பாடல்களில் அவர் அண்ணா மீது கொண்ட பற்று எளிதில் விளங்கும்.

**"தமிழ் மணக்கும் வீடெல்லாம் தென்றல் காற்றாய்**
**தவழ்ந் திடுவார்யெம் அண்ணா"**

என்கிறார்.


ஒவ்வொருவரிகளிலும் ஐயா அவர்கள் அண்ணா மீது கொண்ட பற்று புலப்படுகிறது.

**"பாயிரங்கள் எழுதினாலும் உனது கீர்த்தி**
**படிவதில்லை! பகுத்தறிக் கோவே! மண்ணில்**
**ஆயிரம் பேர் பிறந்தாலும் உனக்கீடாக**
**ஆனவர்கள் யாருமில்லை!**

எனக் கூறுகிறார்.

திராவிட இயக்கம் தம்முடைய கொள்கைகளை இதழ்களில் எழுதியும் மேடைகளில் முழங்கியுமே தமிழ்நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றியது என்று குமுத்தரசன் கூறுகிறார். ஈ.வே.ராவிடம் இதழியல் பயிற்சி பெற்ற அண்ணாதுரையும் சிறந்த படைப்பாளராகவே விளங்கினார்.

படைப்பிலக்கியங்கள் வாயிலாகத் தன்மானச் சிந்தனைகளை வழங்கியவர்களில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். காலச் சூழலுக்கேற்ற வண்ணம் சிறுகதை மற்றும் இலக்கியங்கள் வழியே சமுதாயச் சிந்தனைகளுக்கு புது வடிவம் தந்துள்ளார்" எனக் குறிப்பிட்டுள்ளது பொருத்தமானது.



பொதுவாக அண்ணாகாலம் காலமாகத் தமிழ்ச் சமுதாயத்தில் நிலைபெற்று காணப்படுகின்ற ஆதிக்கத் தன்மையையும் பொருளாதார மற்றும் வர்க்க முரண்பாடுகளால் ஏற்படும் சமூக உளவியல் பாதிப்புகளையும் சமகால நிகழ்ச்சிகளையும்தனிமனிதப்பிரச்சினைகளையும் கருத்துக் களஞ்சியமாய் வைத்து சிறுகதைகளைப் படைத்துள்ளமை தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் குறிப்பிடத்தக்கது என ஆவடிக்குமார் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஏழிசையாய், இசைப்பயனாய் பாலீ ஜீன்மிசை பண்பட்டுத் திகழும் தமிழ்மொழி பண்பாட்டின் அடையாளச் சின்னமாக பல சமூக மாற்றங்களுக்கு வழிகண்டவர் என அண்ணாவைக் குறிப்பிடுகிறார் ஆவடியார் ஐயா அவர்கள்.

**ஏழைகளின் சிரிப்பினிலே இறையோன் காண**
**எல்லோரும் உழைத்திடுவோம் வாரீர் என்று**
**தாழைமடல் மணங்கமழும் தமிழெடுத்து**
**தம்பிக்கு மடல் தீட்டிமனம் கவர்ந்து**
**பீழைநிறை மாந்தரினை ஒன்று சேர்த்து**
**பகுத்தறிவுப் பாதையினை காட்டி அஞ்சும்**
**கோழைகளும் கொதித்தெழுந்து கழகம் காக்கும்**
**கொள்கைப் போர்வீரராக்கியவர் எம் அண்ணா!**

என நினைவுப்படுத்துகிறார். "பீழைநிறை மாந்தர்" என குறிப்பிடுவது கோழைகளாக இருக்கும் மாந்தர்களையே" தூக்கத்தை தூர வை"

துணிச்சலை நெஞ்சில் வை" என்று கூறியுள்ளார். தினத்தந்தியை தமிழுக்கு வாள் என்றும் கேடயம் என்றும் அண்ணா புகழ்ந்துள்ளார். செய்திகளை மக்களுக்குப் புரியும் வண்ணம் இனிமையாகவும் எளிமையாகவும் ஐயா அவர்கள் தன் "நெஞ்சக் கதிர்களின்" கிரணங்களில் நம்மைக் குளிர்காயவிட்டிருக்கிறார். தமிழ் இலக்கிய உலகிற்குப் பெருமை சேர்க்கும் விதமாய் தத்துவமாய் தனிப்புகழ் உரைத்திட்டார்.

**'தன்மானத் தத்துவங்கள் தங்கும் நாடாய்**
**தண்மைநிறை தமிழ்த்தாயின் இதயக் கூடாய் "**

எனஅழகான இருவரிகளில் தத்துவ மேதை என்பதை வெளிக்காட்டியுள்ளார்.

நிலையான அமைதியே நிறைவு வற்றாத ஆனந்தத்தைத் தனக்குள் தேடிக் கண்டுகொள்வதே"

வாழ்வின் தலையாய குறிக்கோள் என்றும் **"தேடிச் சோறு நிதம் தின்று பல சின்னஞ் சிறுகதைகள் பேசி வாழ்வை வெறுமையாக்கும்''** என்பதனை மாற்றி இருக்கிறது ஆவடிக்குமார் அவர்களின் "நெஞ்சக் கதிர்கள் "

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்று குறிப்பிட்ட பாரதியார் இப்போதோ உழவுக்கும் தொழிலுக்கும் வஞ்சனைதான் செய்கிறார்கள். இந்நிலைமாறும் மாறவேண்டும் என்பதை



**"தூக்கத்தைத் தூங்க வைத்து வாழ்க்கை தன்னில்**
**துணிவினையே துணைக் கழைத்து நாட்டிலன்று**
**ஏக்கமுடன் கிடந்திட்ட ஏதுமற்ற**
**ஏழையர்கள் ஏற்றமுற திட்டம் தீட்டி**
**ஊக்கமுடன் பாடுபட்டு உழைப்போர் நெஞ்சில்**
**உறவுடனே வாழ்கின்ற அண்ணா பாதை!**
**ஆக்கத்தைத் தோற்றுவித்து மக்கள் வாழ்வில்**
**அமைதியினைத் தேக்கிவைக்கும் அறிவுப் பாதை!**

என்று சோம்பிக் கிடக்கும் மனிதர் மத்தியிலும் அண்ணாவின் பாதைகள் சுறுசுறுப்பான நடத்தை நமக்கு வழிகாட்டும் என்று கவிதையில் குறிப்பிடுகிறார். தமிழின் புகழ் அறியா மக்களை" தலையில்லா முண்டம் "என்று குறிப்பிடு கிறார்.

> **"பீழைநிறை மாந்தர்" என குறிப்பிடுவது கோழைகளாக இருக்கும் மாந்தர்களையே'**

**"கலைக்கதிராம் தமிழின் கீர்த்திக்**
**கட்டழகைக் கலைப்பதற்கு**
**அலைந்திட்ட அலிகள் கூட்டம்**
**அடங்கியோடச் செய்த மன்னா!**
**தலையில்லா முண்டம் போன்ற**
**தருக்கர்கள் தமிழழிக்க**
**உலைவைக்கும் போது அண்ணா!**
**உன் நினைவே உடைவாள் தூக்கும்"**

என்ற வரிகள் வழியாக அண்ணாவின் நினைவு வீரமென்றும், அது உடைவாள் தூக்கும் என்பதில் ஐயமேது? "

''தருக்கர்கள் ''என்ற வார்த்தைகளை எல்லாம் இப்போது யாரும் பயன்படுத்துவது இல்லை. அருமையான சொல்லாடல், பொருள் விளக்கம் மக்கள் சமுதாயத்தின் முன்னேற்றமும் உலக அமைதியும் கருத்துப் பரிமாற்றத்தின் வழியாகத்தான் நடைபெறமுடியும் என்று தன் ஒவ்வொரு வரிகளிலும் நிருபிக்கிறார்.

காலம் மாறிக் கொண்டே போகிறது. காலத்திற்கேற்ப நடையும் மாறுகிறது. மாற்றம் மானுடத்தின் தேவை என்பதற்கேற்ப காலம் மாற மாற புரியாத சொற்றொடர்கள் புலமையும் மாறுகிறது. ஆவடிக்குமார் அவர்களின் கவிதைகளில் மொழிநடையில் மூன்று நிலை யினையும் காணலாம். ஒலிநிலை முதலாவதாகும். எதுகை மோனை முரண், இயைபு சந்தநயத்தையும் தன் கவிதையில் புகுத்தி உள்ளார். குறிப்பிட்டு சொல்ல வேண்டுமென்றால் "ஐயா" அவர்களின் கவிதைகளில் பிறமொழிச் சொற்கள் வந்ததே இல்லை.



அண்ணா அவர்கள் போல உவமையோடு சொற்பொழிவாற்றுகின்ற ஆற்றல் படைத்தவர்கள், எழுதுகின்ற ஆற்றல் படைத்தவர்கள் மிகவும் சொற்பமானவர்களே. அண்ணாவின் எழுத்தோயங்கள் வெறும் ஏட்டுப் படைப்பின் விளைவல்ல. பொதுப்பணி என்ற பெயரால் தான் பெற்ற செல்வாக்கை பணப் பெட்டியை நிரப்பும் வழியாக உபயோகிப்பவன் மக்களால் வெறுக்கப்படுவான். அவன் எவ்வளவு அருமையான கொள்கைகளைக் கூறினாலும் அது ''செம்பாகுமே'' தவிர ''பொன்னாக'' ஆகாது என தன் வரிகளில் அண்ணாவின் பொன் மொழிகளாகக் கூறியுள்ளார் சொல்லின் செல்வர்.

**சத்தியத்தின் சாரதியாய் வந்துதித்து**

**சமதர்மப் பேரிகையாய் சங்கொலித்து**

**நித்திரைக்கு நெடுந்திரையைப் போர்த்தி வைத்து**

**நாட்டுக்காய் உழைப்பதிலே கீர்த்தி சேர்த்து**

என அற்புதமானவரிகளில் கூறியுள்ளார். மேலும் "அரசியல்" மூலம் நாம் விரும்புவது சில்லறைப் பதவிகளை அல்ல சிங்கார வாழ்வையல்ல நம் இனத்தின் விடுதலையைத் தான் என்று விளம்புகிறார்.

''கடவுளும் மனிதநேயமும் ஒன்றுதான்'' என்பதை கடைசி வரை பின்பற்றினார் அண்ணா. தமிழ் ஒன்றே மூச்சென வாழ்ந்தவர் அண்ணா.

**"தீயில்லாது வேறொளி யெம் நெஞ்சில் இல்லை!**

**தீந்தமிழே! உன் நினைவே இன்பக் கொள்ளை!** என்கிறார்.

**முடிவுரை :**

**''பாலெல்லாம் நல் ஆவின் பாலாமே**

**நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ"**

என்பது போல எழுத்தெல்லாம் அண்ணாவின் எழுத்தாமோ என்று உரைக்காதோர் உண்டோ? அண்ணாவைப் பற்றிய ஐயா அவர்களின் பேச்சில்

**"சொல்லிற் கருவிருக்கும்**

**செம் பொருளிற் சொல் சிறக்கும்**

**பேச்சிற் கனலடிக்கும்**

**பெய்யும் மழைகாலிரங்கும் "**

தமிழ் மொழிக்கும், தமிழ் சமுதாயத்துக்கும், தமிழ்நாட்டுக்கும் அண்ணா ஆற்றிய அளப்பரிய தொண்டுகளை நினைவில் நிறுத்தி அவர் வழியில் நாளும் உழைக்கத் தூண்டும் ஆணித்தரமான கவிதைகளாக்கி தந்துள்ள சொல்லின் செல்வர் ஆவடிக்குமார் அவர்களின் 'நெஞ்சக்கதிர்கள்' என்னும் நூல் வெளிப்படுத்துகிறது.

> **“கடவுளும் மனிதநேயமும் ஒன்றுதான்” என்பதை கடைசி வரை பின்பற்றினார் அண்ணா.**

Printed, Publishen and Owned by M.AVADIKUMAR, Published at No.71, Ninth Street, Kamaraj Nagar, Avadi, Chennai- 600 071 and Printed at AVADIKUMAR ACHAGAM, No.71, Ninth Street Kamaraj Nagar, Avadi, Chennai- 600 071, Editor-M.AVADIKUMAR.

# கழகமுரசு

ஆசிரியர்: 'சொல்லின் செல்வர்' ஆவடிக்குமார்

# உங்கள் வீடுதேடி வர வேண்டுமா...?

சந்தா செலுத்துங்கள்...!
விவரம்:

| | | |
|---|---|---|
| தனியிதழ் | - | ரூ. 50 |
| ஓராண்டு. | - | ரூ. 600 |
| மூன்றாண்டு | - | ரூ. 1,800 |
| ஐந்தாண்டு | - | ரூ. 3,000 |

**மின்னிதழ்**

| | | |
|---|---|---|
| ஓராண்டு. | - | ரூ. 200 |
| ஐந்தாண்டு. | - | ரூ. 1,000 |

| | | |
|---|---|---|
| **புரவலர்** | - | **ரூ. 10,000** |







காசோலை / வரைவோலை / மணியார்டர் மூலம் அனுப்பும் போது "Kazhaga Murasu" என்று குறிப்பிட வேண்டும். "கழகமுரசு" தமிழிலக்கியத் திங்களிதழ் சந்தா தொகை ரூ..............யை, ஆன் லைன் / காசோலை/ வரைவோலை / மணி ஆர்டர் வழியாக அனுப்பி உள்ளேன்.

பெயர்: ....................................................

முகவரி: ....................................................

தொலைபேசி: ....................................................

மின்னஞ்சல் : ....................................................

**கழகமுரசு :** எண். 71, ஒன்பதாவது தெரு, காமராசர் நகர், ஆவடி, சென்னை - 600 071.
**மின்னஞ்சல்:** managerkazhagamurasu@gmail.com,
**தொலைபேசி:** 044 26558197 / 9941174777

## Online வழியாக செலுத்த...

Name:- KAZHAGA MURASU
Bank:- VIJAYA BANK
Branch:- AVADI
A/c. Number:- 301800301000553
IFSC Code: VIJB0003018

**இணையம்:** https://www.kazhagamurasu.in

KAZHAGA MURASU (Tamil Monthly) August 2020. Registrar of News papers for India TNTAM / 2003 / 11289

**செப்டம்பர் முதல்**

**வாங்கி படியுங்கள்...!**




**புரட்சித்தலைவி அம்மா அவர்களின்... ஆட்சிக்கு அரணாக...**

**களம் காணும் கழகத் தொண்டர்களின் கையேடாக...**

**மாதமிரு முறை ஒலிக்கும்...**

**அம்மாவின் குரல்**

ஆசிரியர் : சொல்லின் செல்வர் ஆவடிக்குமார்

**மாதம் இருமுறை இதழ்**

தொடர்புக்கு...

**ஆவடிக்குமார்,**

ஆசிரியர், “அம்மாவின் குரல்” (மாதம் இரு முறை இதழ்)
71, ஒன்பதாவது தெரு, காமராஜநகர், ஆவடி,
சென்னை 600 071